## கமெண்ட் கந்தர்...

உள்ளூராட்சித் தேர்தல் வருமா என்று கேட்டால்... வரும் ஆனால், வராது என்றுதான் சொல்லோணும் பாருங்கோ..!





Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 125 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 28ஆம் திகதி புதன்கிழமை (14.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 19, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


இரட்டை பிரஜாவுரிமை விடயத்தில் டயனா கமகே எம்.பிக்கு அடுத்தபடியாக சுரேன் ராகவன் எம்.பியின் பெயரும் அடிபடுகிறது.

அவர் கனேடிய குடியுரிமையைக் கொண்டிருப்பதாக தகவல்கள் கசிந்துள்ளன. அவருக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய சிலர் தயாராகி வருகின்றனர்.



## உஷ்



# மைத்ரியால் தப்ப முடியாது!

### ஈஸ்ரர் தின தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டுமென்கிறார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த

(கே.சுபானி)

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன பொறுப்புக் கூற வேண்டுமென்றும் அந்தப் பொறுப்பிலிருந்து அவர் தப்பிக்க முடியாதென்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 22/2 நிலையியற் கட்டளைச் சட்டத்தின் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இந்துனில் அமரசேன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற காலத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ்...

02 பக்கம்

# நவீன நிதி மோசடி குறித்து எச்சரிக்கை

(நா.தினுஷா)

தொலைபேசி அழைப்புகள், குறுந்தகவல்கள், மின்னஞ்சல் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடான நிதி மோசடிகள் அதிகரித்து வருவதாக நிதி அமைச்சின் நிதியியல் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிதி மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்துவருவதாகவும் இதுகுறித்து மிக அவதானத்துடன் செயற்படுமாறும் அந்தப் பிரிவு வலியுறுத்தியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

02 பக்கம்

# ஜனவரியில் கிடைக்கும் ஐ.எம்.எவ். நிதி உதவி

அமைச்சர் பந்துல நம்பிக்கை

(நா.தினுஷா)

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி தொடர்பில் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும் எதிர்வரும் ஜனவரி மாதமாகும்போது நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமென்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அறிவித்துள்ளதாக...

02 பக்கம்









இலங்கை பத்திரிகை ஆசிரியர் பேரவையினால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான ஊடக விருது வழங்கும் விழாவில் லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் தமிழன் பத்திரிகையின் சூரன் ஏ.ரவிவர்மா சிறந்த விளையாட்டு செய்தியாளராகவும், த சண்டே மோர்னிங் பத்திரிகையின் ஆசிரி பெர்னாண்டோ சிறந்த ஊடகவியலாளராகவும், த மோர்னிங் பத்திரிகையின் மதுஷா தவபாலகுமார் சிறந்த வர்த்தக செய்தியாளராகவும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்த விழாவின்போது லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்துக்கு 11 விருதுகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)



## இந்திய கடற்படை பிரதானி வருகை

02 பக்கம்

# நாடாளுமன்ற பணியாளர்களின் ஓய்வு வயது நீடிக்கப்படாது

### சஜித்தின் கோரிக்கையை நிராகரித்தார் இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய

(நா. தினுஷா)

நாடாளுமன்ற உத்தியோகத்தர்களின் ஓய்வூதியக் காலத்தை மேலும் ஒரு வருடமாக அதிகரிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய நிராகரித்தார்.

இந்த விடயத்தில் நாடாளுமன்ற பணியாளர்களுக்கு மாத்திரம் என்று விசேட அனுமதியை கொடுத்தால் நாம் நமக்குள் மாத்திரம் சலுகைகளை பகிர்ந்துகொள்கிறோம் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு மீண்டும் நாட்டில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

02 பக்கம்






இனப்பிரச்சினை தீர்வுக்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றிரவு கொழும்பில் நடைபெற்றது.

# குற்றம் இழைக்கும் பல்கலை மாணவர்கள் மீது சட்டம் பாயும்

அரசாங்கம் அறிவிப்பு

(நா.தினுஷா)

பல்கலைக்கழகங்களில் முறைகேடாக செயற்படும் மாணவர்களின், மாணவர் அங்கத்துவம் பறிக்கப் பட்டு கடுமையான சட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சரும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ...

02 பக்கம்

# கடவுச்சீட்டு பெறுவதில் சிக்கல்கள்

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கே.சுபானி)

கடவுச்சீட்டை பெறுவதற்கு ஒன்லைன் ஊடாக விண்ணப்பித்தால் அதற்கு ஒன்றரை மாதங்களாகும். தற்போது விண்ணப்பித்தால் ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்திலேயே...

02 பக்கம்



# காணி அளவீட்டுக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

### காரைநகரில் செய்வதறியாது திரும்பிச்சென்ற அதிகாரிகள்

(யாழ்.செய்தியாளர்)

யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நீலங்காடு பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான 40 ஏக்கர் காணியை கடற்படை முகாமுக்கு சுவீகரிக்கும் நோக்குடன் அதனை அளவிடுவதற்கு நேற்று செவ்வாய்க்கிழமை மக்கள்...

02 பக்கம்

# தபால் ஊழியர்களின் கோரிக்கை நிராகரிப்பு

## மேலதிக கொடுப்பனவை வழங்க முடியாதென அரசு திட்டவட்டம்

**(நா. தினுஷா)**

தபால் திணைக்கள ஊழியர்களின் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பான எவ்வித கலந்துரையாடலையும் மேற்கொள்ள வேண்டாமென அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ளது. அதற்கமைய எந்தவிதமாக கொடுப்பனவும் அதிகரிக்கப்படமாட்டாது - என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (13) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தபால் திணைக்களம் நட்டத்திலேயே இயங்கி வருகின்றது. இந்தத் திணைக்களத்தின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தினாலேயே நிதி பெற்றுக்கொடுக்கப்படுகிறது. பெற்ற கடன்களை மீள் செலுத்தாமையினால், மீண்டும் கடன் பெறுவதற்கு கடுமையான வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாகவே 2023ஆவது நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அரச அதிகாரிகளுக்கான கொடுப்பனவுக்காக ஆயிரத்து 2 பில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மொத்த வருமானது கடந்த வருடங்களில் வரி மற்றும் வரியற்ற முறையில் இரண்டாயிரம் பில்லியன் ரூபாவுக்கு குறைவாகவே இருந்தது. மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அதிக வரியினாலும், நாட்டில் நாளாந்த பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய செலவுகளை ஏற்றுக்கொள்ள முடியாமையினாலும் 2023ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களுக்காக சம்பள கொடுப்பனவுகளையும், மேலதிக கொடுப்பனவுளையும் அதிகரிக்காமலிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறானவொரு நிலைமையில் தபால் ஊழியர்கள் ஆறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளாார்கள். அவற்றில் மூன்று கோரிக்கைகள் மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பானவையாகும். ஆரம்பத்தில் தபால் ஊழியர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு மாதாந்தம் 60 மணிநேரத்துக்கு செலுத்தப்பட்டது. அதன்பின்னர், அது மாதாந்தம் 80 மணிநேரமும், 100 மணிநேரமும் அதிகரிக்கப்பட்டது. தற்போது, அவர்கள் மாதாந்தம் 240 மணிநேரத்தை பெற்றுக் கொடுக்குமாறு கோருகிறார்கள்.

இதனை 22 நாட்களால் வகுத்தால் நாளொன்றுக்கு மேலதிகமாக ஒரு நாள் 10 மணிநேரம் மேலதிக நேர கொடுப்பனவை கோரி பணிப்புறக் கணிப்பில் ஈடுபடுகிறார்கள். இது அநீதியான கோரிக்கையாகும் - என்றார்.

# வரிசையாக நான்காவது தோல்வியை சந்தித்த தம்புள்ள அவுறா

நடப்பு எல்.பி.எல். தொடரில் வனிந்து ஹசரங்க தலைமையிலான கண்டி பல்கொன்ஸ் அணி 77 ஓட்டங்களினால் தம்புள்ள அவுறா அணியை வீழ்த்தி தொடரில் 8 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறிய அதேவேளை, போட்டியில் தோல்வியை சந்தித்த தசுன் சானக்க தலைமையிலான தம்புள்ள அவுறா அணி வரிசையாக ஆடிய நான்கு போட்டிகளிலும் தோல்வியை தழுவியது.



கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற தொடரின் 11ஆவது ஆட்டத்தில் தம்புள்ள அவுறா - கண்டி பல்கொன்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கண்டி பல்கொன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் வெறும் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 193 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் கமிந்து மெண்டிஸ் 58 ஓட்டங்களையும் அஷேன் பண்டார 22 பந்துகளில் 42 ஓட்டங்களையும் குவித்தனர்.

194 என்ற கடின இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தம்புள்ள அவுறா அணி ஆரம்பத்திலிருந்து வரிசையாக விக்கெட்களை இழக்க 14.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 116 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 77 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. கண்டி பல்கொன்ஸ் அணியின் பந்துவீச்சில் கார்லஸ் பிரத்வெயிட் மற்றும் சமிந்து விஜேசிங்க ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீதம் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக கமிந்து மெண்டிஸ் தெரிவானார்.

2022 எல்.பி.எல். தொடரில் தம்புள்ள அவுறா அணி மாத்திரமே இதுவரையில் ஒரு வெற்றியைக் கூட பதிவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ரெலிகொம் மறுசீரமைப்பு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பது நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் வலுவான அச்சுறுத்தலாக அமையுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து நிலையியற் கட்டளைச் சட்டம் 22/2 இல் சபையில் கேள்வி எழுப்பிய சஜித் பிரேமதாச, அரசாங்கம் தவறான வழியில் பயணிப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

2020 மற்றும் 2021 ஆகிய இரு வருடங்களில் மாத்திரம் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் முறையே ஆயிரத்து 832 மில்லியன் ரூபா மற்றும் 657 மில்லியன் ரூபா என்றடிப்படையில் அரசாங்கத்திற்கு வரி செலுத்தியுள்ளதோடு, குறித்த வருடங்களில் வரி செலுத்தியதன் பின்னர் முறையே ஏழாயிரத்து 81 மில்லியன் ரூபாவையும், 12 ஆயிரத்து 161 மில்லியன் ரூபாவையும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் இலாபமாக ஈட்டியுள்ளது.

அவ்வாறே, ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் இருக்கும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை சேமிப்பது அரச துறை பொறுப்பின் கீழ் இருக்கவேண்டிய ஒரு பகுதியாகும்.

இருந்தபோதிலும்,இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட 2023 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைக்க அரசாங்கம் முன்மொழிந்திருந்தது. இதுபோன்ற இலாபம் ஈட்டும் நிறுவனங்களை மறுசீரமைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்வது சிக்கலாகவுள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பது நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கும் போலவே தேசிய பாதுகாப்பிற்கும் வலுவான அச்சுறுத்தலாக அமையும் - என்றார்.

### நாடாளுமன்ற பணியாளர்களின்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் நாடாளுமன்ற அதிகாரிகளுக்கான ஓய்வு காலம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

**ரஞ்சித் சியம்பலாபிட்டிய:**

நாடாளுமன்றத்தில் இதற்காக கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அரச சேவையிலுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆனால், திறைசேரி இதனை ஒரு பிரச்சினையாக பார்க்கவில்லை. மாறாக, நாட்டின் பிரச்சினையாகவே கருதுகிறார்கள். இந்த விடயத்தில் பொது தீர்மானமொன்றுக்கு வருவதற்கு மாறாக, மாற்று தீர்வுகள் இல்லை. கொள்கையை பாதுகாக்கும் பொறுப்பு திறைசேரிக்கு இருக்கிறது. இதிலுள்ள உண்மைத் தன்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**சபாநாயகர்:**

நாடாளுமன்றம் சுயாதீன நிறுவனம் என்பதை மறந்துவிட வேண்டாம்.

**சியம்பலாபிட்டிய:**

அவ்வாறெனில் நாம் பொது தீர்மானமொன்றுக்கு வரவேண்டும். திறைசேரியும் இந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறது. அவ்வாறு செய்யாவிட்டால் நமக்குள்ளேயே பகிர்ந்து கொள்கிறோம், நமக்குத் தேவையான சட்டங்களை உருவாக்கிக்கொள்கிறோம் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும். அந்த நிலைக்கு செல்லவேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச:**

நாடாளுமன்ற பணியாளர்களின் ஓய்வு தொடர்பில் பணியாளர் ஆலோசனைக் குழு ஒன்றுகூடி தீர்மானமொன்றை எடுத்தது. அதற்கு நாங்கள் கையொப்பமிட்டோம். இருந்தபோதும் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு அதில் கையொப்பமிட முடியாமல் போயுள்ளது. 65 வயதை 60 வயதாக்கியதால் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையாகும். 60 வயதை 65 வயதாக்கியதன் பின்னர் அதிகாரிகள் வங்கிகளில் கடன்களை பெற்றுக்கொண்டுள்ளனர். நாடாளுமன்ற அதிகாரிகளும் வங்கிகளில் கடன்களை பெற்றுக்கொண்டுள்ளனர். ஓய்வூதிய வயதெல்லையை 65 ஆக அதிகரித்ததாலேயே அந்தக் கடனைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

தற்போது பெற்ற கடன்களை மீள் செலுத்துமாறு கோருகிறார்கள். அதன்காரணமாகவே இந்த வயதெல்லையை இன்னும் ஒரு வருடமாக அதிகரிக்கத் தீர்மானித்தோம். எனவே, எங்களின் தீர்மானத்தை நடமுறைப்படுத்துமாறு கோருகிறோம். திறைசேரியின் நிலைப்பாட்டை ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிடுகிறார். ஆனால், இதனைச் செய்வதால் மேலதிக செலவு எதுவும் ஏற்படாது. எவ்வாறு இவர்கள் பெற்ற கடன்களை மீள செலுத்துவார்கள்? உடனடியாக பணியாளர் ஆலோசனைக்குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 60 வயதை 65 வயதிற்கு எடுத்த தீர்மானத்துக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை.

**பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன்:**

27(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் எதிர்க்கட்சித் தலைவர் வேறு வேறு பிரச்சினைகளை உருவாக்கிக்கொள்கிறார். நாம் நிலையியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கடமையாற்றுவோம்.

**எதிர்க்கட்சித் தலைவர்:**

இளவயது அமைச்சராக தென்னகோன் இவ்விடயத்தில் சம்பிரதாயத்தை அறிந்து கொள்ளுங்கள். அவ்வாறு தெரியாவிட்டால் புத்தகத்தை நன்றாக வாசியுங்கள்.

**ரஞ்சித் சியம்பலாபிட்டிய:**

மூன்று தடவைகள் எதிர்க்கட்சித் தலைவர் இந்தப் பிரச்சினையை பேசியுள்ளார். இது நாடாளுமன்றத்தின் பிரச்சினை மாத்திரமல்ல.

நாட்டில் இன்றிருக்கும் நிலைமையை புரிந்துகொள்ள வேண்டும். இந்த விடயத்தில் திறைசேரி மனிதாபிமானமின்றி செயற்படவில்லை. அரசாங்கத்தின் கொள்கையை பாதுகாக்க திறைசேரி கடமைப்பட்டுள்ளது.

**எதிர்க்கட்சித் தலைவர் :**

அன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் நாங்கள் நால்வரும் இணக்கம் தெரிவித்தோம். ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் அங்கு இருந்தார். அதன்போது, அந்தத் தீர்மானத்தை நீங்கள அறிவித்திருக்கலாம்.

**ரஞ்சித் சியம்பலாபிட்டிய:**

இது கொள்கை அடிப்படையிலான பிரச்சினை என்று அந்தக் கலந்துரையாடலில் அறிவித்திருந்தோம். திறைசேரியின் நிலைப்பாடு முற்றிலும் மாறுபாடானது என்று நான் அதன்போது தெளிவாக குறிப்பிட் டிருந்தேன். அந்தப் பதிவையும் பார்க்குமாறு நான் கோருகிறேன்.

**பிரமித்த பண்டார தென்னகோன்:**

சபையின் முழு நேரத்தையும் எல்லாம் அறிந்த எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எதிர்க்கட்சித் தலைவர்:**

என்னை அனைத்தும் அறிந்தவர் என்று கூறியதற்கு மகிழ்வடைகிறேன். ஆனால், நான் மாத்தளையில் அடாவடிசெய்பவர் இல்லை.

### காணி அளவீட்டுக்கு...

எதிர்ப்பை வெளியிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து அங்கு வந்த நில அளவைத் திணைக்களத்தினர், மக்களுக்கு சொந்தமான காணியை கடற்படையினருக்கு அளவிடுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று எழுதி ஒப்பமிடப்பட்ட எழுத்து மூலமான ஆவணத்தை பெற்றுக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் காணியின் உரிமையாளர்கள், சமூகமட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழகத்திலிருந்து யாழுக்கு விரைவில் படகுச் சேவை

**(கே.சுபானி)**

இந்தியா - இலங்கைக்கிடையிலான படகுச் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், தென்னிந்தியாவிலிருந்து காங்கேசன் துறைக்கும், திருகோணமலையிலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கும் இடையேயான படகுச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

துறைமுகங்கள்,கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரை யாடலின்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி திட்டத்தின் முதற்கட்டமாக காங்கேசன்துறைமுதல் பாண்டிச்சேரிவரையிலான படகுச் சேவை எதிர்வரும் ஜனவரி இரண்டாம் வாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான இந்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளது.

தம்பதிவ புனித யாத்திரை மேற்கொள்ளும் இலங்கை யாத்திரிகர்களுக்கும், வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வர்த்தகர்களுக்கும் இப்படகுச் சேவை வரப்பிரசாதமாக அமையும் - என்றார்.

இதன்போது, படகு பயணத்திற்காக பயணியொருவரிடமிருந்து 60 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படவுள்ளதுடன், 100 கிலோகிராம் எடையுள்ள பொருட்களை மாத்திரமே எடுத்துச்செல்ல முடியும் என்றும் படகு உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

# மூன்று பிள்ளைகளுக்கு விஷம் கொடுத்து தற்கொலைக்கு முயற்சித்த இளம் தாய்

**(ஆ. ரமேஸ்)**

நுவரெலியா மாவட்டம், வலப்பனை மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலமுள்ள மாரதுவெல எனும் இடத்தில் 25 வயதான இளம் தாய் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளுக்கும் விஷம் கொடுத்து தானும் நஞ்சுண்டு உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் (12) மாலை இடம்பெற்றுள்ளதாக மத்துரட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விடயம் அறிந்த அயலவர்கள் உடனடியாக தாய் மற்றும் பிள்ளைகள் மூவரை காப்பாற்றியுள்ளனர். இது தொடர்பில் 119 அவசர பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். அதன்பின் சம்பவ இடத்திற்கு விரைந்த மத்துரட்ட பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தனது கணவர் தன்னையும், பிள்ளைகளையும் கவனிப்பதில்லை, உண்ணுவதற்கு உணவுப் பொருட்களைப் பெற்றுத் தருவதில்லை, பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப உபகரணங்கள் பெற்றுத் தருவதில்லை. இந்நிலையில், தொடர்ந்து பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலையில் நஞ்சு உட்கொண்டு உயிரை மாய்த்துக்கொள்ள தயாராகியதாக இதன்போது விசாரணையில் இளம் தாய் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பிள்ளைகளுக்கு நஞ்சு கொடுத்து தானும் தற்கொலை முயற்சிக்கு முற்பட்ட சம்பவம் தொடர்பில் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் 06, 05 மற்றும் 01 வயதுடைய இரண்டு பெண்பிள்ளைகள் மற்றும் ஒரு ஆண் பிள்ளை ஆகியோரை பொலிஸார் மீட்டு தமது பாதுகாப்பில் வைத்துள்ளதாக தெரிவித்தனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் மத்துரட்ட பொலிஸார் தற்கொலைக்கு முயற்சித்த குற்றச்சாட்டில் தாய் மற்றும் பிள்ளைகளை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

### கடவுச்சீட்டு...

அதற்கான பதில் கிடைக்கும். குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தில் இருப்போரிடம் கேட்டால், அச்சிடுவதற்கான தாள்கள் பற்றாக்குறையாகவுள்ளதாக கூறுகின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும சபையில் நேற்று (13) குற்றச்சாட்டை முன்வைத்தார்.

ஒன்லைனில் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தால் ஒன்றரை மாதங்களாகின்றன. வெளியில் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் 15 ஆயிரம் ரூபா செலவழிக்க வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் கடவுச்சீட்டை விநியோகிப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.அதற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பதிலளிக்கையில்,

கடவுசீட்டுக்கு பாரிய கேள்வியுள்ளது. தற்போது தொழில் நிமித்தம் வெளிநாட்டுக்குச் செல்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. ஒன்லைன் ஊடாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும்போது சிரமமின்றி, காலவிரயமின்றி கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

### மைத்ரியால்...

திணைக்களம் ஆகியவை இருந்தன. ஆகையால் அந்தப் பொறுப்பை அவர் மீற முடியுமென அந்தக் காலத்திலும் இந்தக் காலத்திலும் நாம் நினைக்கவில்லை. அதுதான் எங்களுடைய நிலைப்பாடாகும். இது தொடர்பிலான முழுமையான தகவல்களை வழங்குவதற்கு நான் எதிர்பார்க்கிறேன் - என்றார்.

ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கைகளை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் சபையில் அறிவித்திருந்தார். இந்நிலையிலேயே இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிவேனவை சுட்டிக்காட்டி கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஜனவரியில் கிடைக்கும்...

அமைச்சரும் அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (13) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளினாலேயே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நான் அறிந்த வரையில், சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடனான கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார். அதனால், ஜனவரி மாதமாகும் போது நாணய நிதியத்தின் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருக்குமென்றும் அவர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக குறிப்பிட்டார்.

### இந்திய கடற்படை...

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் எட்மிரல் நிஷாந்த உலுகெதென்னவின் அழைப்பின்பேரில் நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்திய கடற்படையின் பிரதானி எட்மிரல் ஆர். ஹரி குமார் நேற்று முன்தினம் (12) நாட்டை வந்தடைந்தார்.

அவரை இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரி ரியர் எட்மிரல் பிரியந்த பெரேரா, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றார். ஹரி குமார் தனது விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி உள்ளிட்டோரை சந்திக்கவுள்ளதாக இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாளைய தினம் திருகோணமலையில் நடைபெறவுள்ள கடல்சார் வீரர்களின் பயிற்சி நிறைவு வைபவத்தில் பிரதம அதிதியாக அவர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நவீன நிதி மோசடி...

இந்த விடயம் குறித்து விளக்கமளித்து அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சந்தேகத்துக்கு இடமான தொலைபேசி அழைப்புகள், குறுந்தகவல்கள், மின்னஞ்சல் செய்திகள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்புவதாக வாக்குறுதியளித்து அல்லது பல்வேறு பெறுமதிவாய்ந்த பொருட்களைக் கொண்ட பொதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு சுங்கத் தீர்வைகளை செலுத்தக் கோருதல் போன்ற பொய்யான தகவல்களை வழங்குவதனூடாக தனிப்பட்டவர்களிடமிருந்து பணமோசடி செய்வது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களால் பதிவுசெய்யப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் அண்மைக்காலமாக துரித அதிகரிப்பை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

அதனால், முறையான சரிபார்த்தலின்றி மேற்குறித்த தகவல்களின் அடிப்படையில் இனந்தெரியாத தரப்பினர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை வைப்பிலிட வேண்டாம் என்றும் வேறு வழிகளில் பணம் அனுப்ப வேண்டாம் என்றும் நிதியியல் உளவுப் பிரிவு கோரிக்கை விடுகிறது.

மேலும், அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மோசடிக்காரர்கள் அத்தகைய கொடுக்கல்,வாங்கல்களை முன்னெடுக்கும் பொருட்டு, தனிப்பட்ட கடவுச்சொற்கள் (PIN), அட்டைகளின் புறப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டவாறான கொடுப்பனவு அட்டைகளை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் அட்டை சரிபார்த்தல் பெறுமானங்கள் (CVV), கொடுக்கல்,வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு தடவை கடவுச்சொற்கள் (OTP), செல்லிட வங்கிச் சேவையில் அல்லது இணையவழி வங்கிச் சேவையில் பயன்படுத்தப்படுகின்ற பயனர் அடையாளங்கள், கடறுவச் சொற்கள் மற்றும் ஒரு தடவை சொற்கள் போன்ற தகவல்களை கோரலாம்.

எனவே, அவ்வாறான தனிப்பட்ட (பிரத்தியேக) தகவல்களை மூன்றாம் தரப்பினரிடம் பகிர்ந்துகொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான மோசடிகள் குறித்து விழிப்பாக இருக்குமாறும் நிதியியல் உளவுப் பிரிவு எச்சரிக்கை விடத்துள்ளது.

இந்தத் தகவல்களை வழங்குவதனூடாக தகவல் வழங்கும் குறித்த நபர் நிச்சயமாக நிதியியல் மோசடியொன்றின் மூலம் பாதிப்படையச் செய்யும். அதுபோன்ற சந்தேகத்துக்குரிய தொலைபேசி அழைப்புகள் அல்லது குறுந்தகவல்கள் உங்களுக்குக் கிடைக்குமெனில், 0112477125 அல்லது 0112477509 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக நிதியியல் உளவுப் பிரிவுக்கு அறிவிக்குமாறும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

### குற்றம் இழைக்கும்...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள வன்முறைகள் மற்றும் பேரழிவுகள் குறித்து இந்த வாரம் இடம் பெற்ற அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. பேராதெனிய பல்கலைக்கழத்தின் முன்னாள் உபவேந்தர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற முழுமையான அறிக்கையொன்றை பெற்றுத்தருமாறு ஜனாதிபதி கோரியிருந்தார்.

இதற்கு மேலதிகமாக தற்போதுள்ள நிலைமை குறித்து ஆழமாக கலந்துரையாடியிருந்தோம். ஒருசில அமைப்புகளினால் கொலைச் சம்பவங்களுக்காக பல்கலைக்கழக கட்டமைப்பை பயன்படுத்திக்கொண்ட வரலாறு எமக்கு இருக்கின்றது. பேராசிரியர் ஸ்டேன்லி விஜயசுந்தரவை கொழும்பு பல்கலைக் கழகத்துக்குள்ளேயே கொலை செய்ததுமுதல் விரிவுரையாளர்களை அறைக்குள் அடைத்து மாணவர்களால் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவங்களும் நாட்டில் பதிவாகியிருந்தன. மாணவர்கள் கொலைசெய்யப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன.

அந்த நிலைமை நாட்டில் மீண்டும் தலைதூக்கிவருவது தொடர்பிலும் பல்கலைக்கழகங்களில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளது தொடர்பிலும் பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுத்து கல்வி கற்கும் மாணவர்கள் முதல் உள் மற்றும் வெளிக்கள பணியாளர்கள் முதல் அச்சமின்றி பல்கலைக்கழகங்களுக்குள் நடமாடுவதற்கான சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட ஏனைய சட்டம், ஒழுங்கு பிரிவுகளிடமும் ஜனாதிபதி கோரியுள்ளார்.

அவ்வாறு இல்லாவிட்டால் கற்ற நிபுணர்கள் நாட்டில் இருப்பதற்கு பொருள் இல்லாமலாகிவிடும். பேராதெனிய பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் உள்ளிட்ட அவரின் குடும்பத்தாருக்கு இடம்பெற்ற அநீதி குறித்து கவலையடைகிறேன். வன்மையாகக் கண்டிக்கிறேன். முறையாக சட்டத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்த நிலைமையை சீராக்க வேண்டும்.

அண்மையில், யாழ். பல்கலைக்கழகத்திலும் இதுபோன்ற சம்பவம் பதிவாகியிருந்தன. அதன்போது, சம்பந்தப்பட்ட சகல மாணவர்களும் மாணவர் அங்கத்துவமும் நீக்கப்பட்டது. இவ்வாறாக கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தால் மாத்திரமே தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பை அச்சமற்ற, நம்பிக்கையுடைய கல்வி கற்கக்கூடிய அறிவியல் ரீதியாக அபிவிருத்தியடைந்த நிறுவனமாக மாற்றியமைக்க முடியும் - என்றார்.

# அரசுடனான பேச்சுக்கு இந்தியாவின் மேற்பார்வையின் கீழ் பிரித்தானியா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் கண்காணிப்பு இருக்க வேண்டும்

## மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்பட்டு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

(வவுனியா திவியா)

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை தொடருமாக இருந்தால் இந்தியாவின் தலைமை மேற்பார்வையின் கீழ் பிரித்தானியா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் மேற்பார்வை இருக்கவேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (12) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ஒரு மாதத்துக்கு முன்பு பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக அறிவித்திருந்தார். நாங்கள் ஏற்கனவே 5 கட்சிகள் சம்பந்தன் ஐயா தலைமையில் கூடி சில தீர்மானங்களை எடுத்து ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தோம். இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் எங்களது கோரிக்கைகளை நாங்கள் முன்வைத்தோம்.

அதில் முதலாவது நில அபகரிப்பு நடந்து கொண்டிருகின்றது. அதனை உடனடியாக நிறுத்தி ஏற்கனவே எடுக்கப்பட்ட நிலங்களை மீண்டும் ஒப்படைக்கவேண்டும் என்ற கோரிக்கையையும், அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக அரசியலமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என இரண்டாவதாகவும், உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்த வடக்கு - கிழக்கு பகுதியில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப்பகிர்வுடனான புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்பட வேண்டும். இந்த ஒழுங்கு முறை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப் படுத்துவதை நாங்கள் விரும்புகின்றோம். இதனடிப்படையில்தான் பேசலாம் என நினைக்கின்றோம். இந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம்தான் நாம் பேச்சுவார்த்தைக்கு தொடர்ச்சியாக வர முடியும் என்ற விடயத்தையும் சொல்ல இருக்கின்றோம்.

அதைவிட சட்டத்தில் இருக்கின்ற மாகாண சபை முறைமை அதிகாரங்களுடன் பகிரப்படுகின்றபோதுதான் எங்களுக்கு இப்பொழுது இருக்கின்ற பிரச்சினைகளை தக்கவைக்க முடியும் என்கின்ற அடிப்படையில் மாகாண சபைத் தேர்தலை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இருக்கின்ற சகல அதிகாரங்களுடனும் தேர்தலை நடத்தி அதற்கான அதிகாரங்கள பகிரப்பட்டு, நடைமுறைப்படுத்தும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தையில் அது முக்கிய இடம்பெறும்.

இன்று இனப்பிரச்சினை என்பது பல வருடங்களாக பேசப்படுகின்ற விடயம். மஹிந்த ராஜபக்ஷ காலத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசி வருகின்றது. இறுதியாக நல்லாட்சி




அரசாங்கத்தின் காலத்தில் பேசப்பட்டபோது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாக அது பிற்போடப்பட்டது அல்லது தட்டிக் கழிக்கப்பட்டது. இப்பொழுதும் நாங்கள் கருதுகின்றோம். இந்த பேச்சுவார்த்தை என்பது ஐ.நா. சபையின் தீர்மானம், உலக நாடுகளின் அழுத்தம் அல்லது பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கான ஒரு செயற்பாட்டை காரணங்காட்டி அதனடிப்படையில்தான் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றதா என்ற சந்தேகம் இருக்கின்றது.

பிரதானமாக இனப்பிரச்சினை தீர்வில் இதுவரைகாலமும் பேசி அரசாங்கத்துடன் நாங்கள் ஏமாற்றப்பட்டோம். இந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்தும் தொடருமாக இருந்தால் இந்தியாவின் தலைமை மேற்பார்வையோடு அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளின் மேற்பார்வை இருக்கவேண்டும் என்பது நாங்கள் முன்வைக்கும் கோரிக்கையாக இருக்கும் என நம்புகின்றேன். தற்போதுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு எங்களது இந்தப் பேச்சுவார்த்தையின் ஊடாக தங்களது நலன்களைப் பேணுகின்ற வாய்ப்பை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்தும் நடைபெறுவதாக இருந்தால் எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதன்மூலமே எங்களது 6 கட்சிகள் மற்றும் மலையகக் கட்சிகள், இதர முஸ்லிம் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு ஒற்றுமையாக தமிழ் மக்கள் இருக்கின்றார்கள் என்பதை தென்னிலங்கைக்கு காட்ட முடியும். அதனை நாம் ஒற்றுமையாக முன்னெடுக்க வேண்டும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க ஐந்து கட்சிகள் கையொப்பமிட்டு பிரதமருக்கு கடிதம் அனுப்பினோம். மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதனைத் தொடர்ந்து நாங்கள் சந்திக்க வேண்டும் எனவும் கோரினோம். இந்தியப் பிரதமரை சந்திப்பதற்கு நாங்கள் காத்திருக்கின்றோம். ஆனால், அதற்கான அழைப்பு வரவில்லை. விரைவில் வருமென நம்புகின்றேன் - எனத் தெரிவித்தார்.



2023ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் ஜி20 தலைமைக்கான ஒருங்கிணைப்பாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நேற்றுமுன்தினம் புதுடில்லியில் சந்தித்தார்.

இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்தின்போது இலங்கை ஈடுபடக்கூடிய பல்வேறு வழிகள், சர்வதேச நிதி ஒத்துழைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்புக்கான சாத்தியக்கூறுகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.



அட்டாளைச்சேனை பிரதேச சபையின் புதிய உறுப்பினராக மீராலெவ்வை முஹம்மது றியாஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருந்த ஏ.எல்.எம்.ஹம்ஸா கட்சியிலிருந்தும், உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அதே கட்சியைச் சேர்ந்த மீராலெவ்வை முஹம்மது றியாஸ் கட்சியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை (08) அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை காரியாலயத்தில் அக்கட்சியின் பிரதி செயலாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில் மற்றும் சட்டத்தரணி அஷ்ஷேக் ஏ.எல்.எம்.காசிம் ஆகியோர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

# யாழில் மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டம்





யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

குளோபல் அசோசியேசன் விஸ்வநாதன் ஒருங்கிணைப்பில் செங்குந்தா பழைய மாணவர்கள் குறித்த திட்டத்துக்கன நிதி அனுசரணையை வழங்கினார்கள்.


முதற்கட்டமாக பாடசாலையின் வங்கிக் கணக்கில் தலா 2 இலட்சம் ரூபா நிதியை வட மாகாண ஆளுநரின் பெயரில் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

மேலும் குறித்த திட்டத்தை தொடர்ச்சியாக செயல்படுத்துவதற்காக புலம்பெயர் வாழும் குளோபல் அசோசியேசன் பங்குதாரர்களான தர்மலிங்கம், சண்முகதாஸ், சூரியகுமாரன், சதீஷ்குமார், ராஜலிங்கம், ராஜகுமாரன் ஆகியோரின் அனுசரணையுடன் சுமார் 10 இலட்சம் ரூபாவுக்கான காசோலை பாடசாலை அதிபரிடம் ஆளுநரால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநருக்கு குளோபல் அசோசியேசன் நினைவுச்சின்னத்தை பாடசாலை அதிபர் வழங்கியதுடன், மாணவர்களுக்கான மூன்று வகையான மதிய சத்துணவை வடமாகாண ஆளுநர் சம்பிரதாயபூர்வமாக மாணவர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில், யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன், வடமாகாண ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# போதையில் முச்சக்கர வண்டியை செலுத்திய படைச் சிப்பாய் கைது



(ஆ.ரமேஸ்)

மது போதையில் முச்சக்கர வண்டியை செலுத்திய இராணுவ வீரர் ஒருவரை இராகலை பொலிஸார் நேற்றுமுன்தினம் (12) மாலை கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள இராணுவ வீரர் இராகலை மந்திரித்தென்ன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

இவர் நேற்று முன்தினம் (12) மாலை மது அருந்திவிட்டு தனது முச்சக்கர வண்டியில் பெண் ஒருவரையும், இவரின் நண்பரான விமானப்படைச் சிப்பாயையும் ஏற்றிவந்துள்ளார்.

இதன்போது வேகக் கட்டுப்பாட்டை மீறி முச்சக்கர வண்டி இராகலை தபால் கந்தோர் அருகில் பிரதான வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள் ளாகியுள்ளது.

இதில் பயணித்த பெண் பலத்த காயங்களுக்கு உள்ளானதுடன், விமானப்படை வீரர் மற்றும் வண்டியை செலுத்திய இராணுவ வீரர் ஆகியோர் சிறு காயங்களுடன் தப்பியுள்ளனர்.

இதன்போது சம்பவத்தை அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த இராகலை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவினர் இவர்களை மீட்டுள்ளனர். இதன்போது பலத்த காயத்திற்கு உள்ளான பெண்ணை அருகிலுள்ள இராகலை பிரதேச வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

அதேநேரத்தில் சிறு காயங்களுடன் மீட்கப் பட்ட இராணுவ வீரர் மற்றும் விமானப் படை வீரர் ஆகியோரை பொலிஸார் பரிசோதித்த போது இவ்விருவரும் அளவுக்கு அதிகமாக மது அருந்திருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து இரு வீரர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ள பொலிஸார் மது அருந்திவிட்டு வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாயை கைது செய்துள்ளனர்.

விமானப்படை வீரரை போதை தெளியும் வரை பொலிஸ் காவலில் வைத்துவிட்டு பின்னர் வீட்டுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அத்துடன், இராணுவச் சிப்பாய் செலுத்திய முச்சக்கர வண்டியையும் பொலிஸார் கைப்பற்றி யுள்ளதுடன், இராணுவச்சிப்பாயை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.





தென்மராட்சி, மறவன்புலோ ஸ்ரீ ஐயப்ப தேவஸ்தான அலங்கார உற்சவத் திருவிழாவின் 12ஆம் திருவிழா கடந்த சனிக்கிழமை (10) சிறப்பாக இடம்பெற்றிருந்தது. (படங்கள் :- சாவகச்சேரி நிருபர்)

# காரைநகர் வர்த்தகர்களுக்கு விசேட கூட்டம்





காரைநகர் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள சகல வர்த்தகர் களுடனான விசேட சந்திப்பு நேற்று காரைநகர் பிரதேச சபையில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் 2023ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதி மற்றும் உணவுப் பாதுகாப்பு சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதோடு, வியாபார நிலையங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளிக் கப்பட்டது,

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் கணேச பிள்ளை பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் காரைநகர் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர், மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், பிரதேச சபையின் செயலாளர், பெரும்பாலான வர்த்தகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

# சட்டவிரோத சுண்ணாம்புக்கல் அகழ்வு வயாவிளானில் முற்றுகை





வயாவிளான், குட்டியப்புலம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்கள் கைப்பெற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது உழவு இயந்திர சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரங்களும் சுண்ணாம்புக்கல்லுடன் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.


# பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2022 டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, டிசம்பர் 14ஆம் திகதி, புதன்கிழமை

# பாவம் ஜனநாயகம்!

''உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடர்பில் இம்மாத இறுதியில் அதற்கான பிரகடனத்தை அறிவிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

புத்தாண்டுக்கு முன்னர் இது குறித்த அறிவித்தல் நிச்சயம் வெளியிடப்படும்'' என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது இம்மாத இறுதி வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடர்பில் அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய பெப்ரவரி மாத இறுதி வாரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிவிப்பில் மாற்றம் ஏதுமில்லை என்று அவர் திரும்பத் திரும்பக் கூறுகின்றார். ஆனால், அவரின் இந்த அறிவிப்பு குறித்து பலத்த சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன.

இந்த உள்ளூராட்சித் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் சட்டப்படி கடந்த செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி தேர்தல் ஆணையத்துக்கு வந்துவிட்டது.

ஆனால், கடந்த இரண்டரை மாதங்களாக அதைச் செய்யாமல் இழுத்தடித்து வந்தது தேர்தல் ஆணையம்.

இப்போது இன்னும் மூன்று வாரங்கள் அதை தள்ளிப் போடுகின்றது அது.

இவ்வளவு சர்ச்சைகள், குழப்பங்கள் வந்த பின்னரும், அத்தேர்தலை அறிவிப்பதற்கான கடைசி தினம்வரை வேண்டுமென்றே அவர் இழுத்தடிக்கின்றமை தொடர்பில் கிளப்பப்படும் சந்தேகங்களில் அர்த்தங்கள் உள்ளன. இந்தத் தேர்தலை நடத்தாமல் தள்ளிப் போடுவதற்கான நடவடிக்கையை அரசு எடுப்பதற்கு இடமளித்து,

கடைசி நேரம்வரை காலத்தை இழுத்தடித்து, அரசுக்குரிய கால அவகாசத்தை அவர் வழங்குகின்றார் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி வட்டாரங்களின் எல்லை மீளாய்வுக் குழுவை நியமித்துள்ள அரசு, அந்த விடயங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை இரண்டு வாரங்களில் வெளியிட்டு - பின் அதனடிப்படையிலான சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு வசதியாக, தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தை இடைநிறுத்தும் சட்டமூலம் ஒன்றை அவசர சட்டம் மூலமாக விசேட நாடாளுமன்ற அமர்வைக் கூட்டி நிறைவேற்றத் திட்டமிடுவதாகக் கூறப்படுகின்றது.

அதற்குரிய கால அவகாசத்தை அரசுக்கு வழங்குவதற்காக இம்மாத இறுதிவரை உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுப்பதை வேண்டுமென்றே தள்ளிப்போட்டு வருகின்றது சுயாதீன (?) தேர்தல் ஆணையம் என்பது பலரினதும் அபிப்பிராயமாக இருக்கின்றது.

இப்படித் தேர்தல் ஆணையம் காலத்தை இழுத்தடித்ததை வசமாகப் பயன்படுத்தித் தேர்தலை அரசு தள்ளிப்போடுமானால், அத்தேர்தல் நடக்காமல் தள்ளிப் போனமைக்கான முழுப் பொறுப்பையும் தேர்தல் ஆணையமும் அதன் தலைவரும்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ரணிலைப் பொறுத்தவரை அடுத்த இரண்டு வருட ஆட்சி காலம்தான் அவருக்கு இப்போது உள்ளது. இந்த காலத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தை மீட்பாரோ, இல்லையோ, அதன் பின்னர் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான தனது பதவிக்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதில் மட்டும் அவர் முனைப்பாக இருக்கின்றார்.

இயன்ற விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, தமது அடுத்த பதவி காலத்தையும் உறுதிப்படுத்த அவர் விரும்புகின்றார்.

இப்போது அத்தகைய ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி தேர்தலை நடத்தினால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அதைப் பயன்படுத்தி தன்னை விஸ்வரூபம் கொள்ள வைத்துவிடும். அந்த வெற்றியில் திளைத்து நிற்கும் அக்கட்சியின் வேட்பாளரை - பெரும்பாலும் அதன் தலைவர் சஜித் பிரேமதாசவை - அதன் பின்னர் நடைபெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்கடிப்பது மிகக் கஷ்டமாக இருக்கும் என்று கணக்குப் போடுகின்றார் ரணில்.

அதன் காரணமாகத் தாம் விரைவில் நடத்த உத்தேசித்திருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், எந்த தேர்தலையும் - உள்ளூராட்சித் தேர்தல் உட்பட - நடத்த இடமளிக்காமல் பார்ப்பதில் ரணில் உறுதியாக இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அதனால்தான் நடக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலுக்கு இப்போது ஆப்பு வைக்கப்படுகின்றது.

தேர்தல் ஒன்றுக்குத் தயார் போலவே வேலைகளை செய்து கட்சிக் கூட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறது ஆளுந்தரப்பு. கடந்த வாரம் பத்திரிகை விளம்பரம் ஒன்றை வெளியிட்டு வேட்புமனுவுக்கு விண்ணப்பிக்க கோரியிருந்தது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. உள்ளூராட்சித் தேர்தல் திடீரென ஒத்திவைக்கப்பட்டால் அதற்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லையென்று காட்டுவதுதான் இதன் யுக்தியாக இருக்கலாம். நாட்டில் ஜனநாயகம் படும் பாட்டை நினைத்தால் பாவமாக இருக்கிறது.

# வரலாறில் விடுபட்டு புதிய வழியில் பிரச்சினைகளைக் கையாள ஒரு வாய்ப்பு



கலாநிதி ஜெகான் பெரேரா

2023 பட்ஜெட் கணிசமான பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேறியமை பாதகமான சூழ்நிலைக்கு மத்தியிலும் அரசாங்கத்தின் நாடாளுமன்ற பெரும்பான்மை உறுதியாக இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது. ஆளும் கட்சி இருபதுக்கும் அதிகமான அதன் உறுப்பினர்களை இழந்துவிட்டது. அவர்கள் இப்போது கட்சியின் நிலைப்பாடுகளை பின்பற்றுவதில்லை. ஏனைய உறுப்பினர்கள், தெளிவான தலைமைத்துவம் இல்லாவிட்டாலும் கூட ஒன்றிணைந்து நிற்கிறார்கள் போல் தெரிகிறது.

பிரிந்துசென்ற குழுக்களில் ஒன்றுக்கு தலைமைதாங்கும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆளும் கட்சி உறுப்பினர்களை கடுமையாக கண்டனம் செய்தார். எந்த ஆணை மீது கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அந்த உறுப்பினர்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டார்களோ அந்த ஆணைக்கு அவர்கள் துரோகமிழைத்துவிட்டதாக அவர் கூறினார். அரசுக்கு சொந்தமான பொருளாதார நிறுவனங்கள் உட்பட அரச சொத்துகளை பாதுகாப்பதாக முன்னைய தேர்தல்களின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

பொதுஜன பெரமுன கடந்த தேர்தல்களில் முன்வைத்த சொந்த விஞ்ஞாபனங்களை கைவிட்டு இப்போது ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசுவாசத்தைக் காட்டுவதாக பேராசிரியர் நாடாளுமன்றத்தில் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய உரையில் குற்றஞ்சாட்டினார்.

2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலிலும் 2020 நாடாளுன்றத் தேர்தலிலும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை மேலும் அபிவிருத்தி செய்து நவீனமயப்படுத்துவதாக வாக்காளர்களுக்கு திரும்பத் திரும்ப உறுதியளித்த பொதுஜன பெரமுன நிதியமைச்சர் என்ற வகையில், இலாபத்தில் இயங்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களைக் கூட விற்றுவிடுவதற்கு திடசங்கற்பம் பூண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குகிறது என்று பேராசிரியர் சுட்டிக்காட்டினார். ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் உட்பட பல அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது குறித்து ஜனாதிபதி யோசனைகளை முன்வைத்திருக்கிறார்.

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்துவதற்கு பாதை திறந்துவிடப்படுகின்றது என்பதை அரசாங்கத்தின் பட்ஜெட் யோசனைகள் தெளிவாகக் காட்டுகின்றன. அந்த நிறுவனங்களை பாதுகாக்கவேண்டும் என்று முன்னர் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களது நிலைப்பாட்டை மாற்றவேண்டிய தேவை குறித்து இப்போது விளக்கமளித்துக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கை அதன் சொத்துகளில் சிலவற்றை விற்பனை செய்வதன் மூலம் வெளிநாட்டு செலாவணிக் கையிருப்பை அதிகரிக்காவிட்டால் சர்வதேச வாணிப முறைமையின் ஓர் அங்கமாக இருக்கமாட்டாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். வெளிநாட்டு நாணயக் கையிருப்பை 300 கோடி டொலர்களுக்கும் அதிகமாக அதிகரிக்காவிட்டால் இலங்கையின் வங்கிகளினால் வழங்கப்படும் கடன் பத்திரங்களை சர்வதேச கம்பனிகள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

**திடீர் மாற்றம்**

ஆளும் கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தின் பின்னால் உள்ள உண்மையான அரசியல் (Realpolitik) நடைமுறை சாத்தியமான இலக்குகளை அடிப்படையாக கொண்ட அரசியலாகும். இங்கு இலட்சியங்களை விடவும் தப்பிப் பிழைப்பதே நோக்கமாகும். ஒரு வருடத்துக்கு முன்னர் நாட்டை உலுக்கிய பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து மூண்ட போராட்ட இயக்கம் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் செயலகங்களையும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களையும் முற்றுகையிட்டு அதன் உச்சக்கட்டத்தை அடைந்தது.

அந்த போராட்ட இயக்கம் ஜனாதிபதியையும் பிரதமரையும் பதவிவிலக வைத்து மக்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய நம்பகமான எந்த தலைமைத்துவத்தையும் ஆளும் கட்சிக்கு இல்லாமலாக்கியது. இத்தகைய பின்புலத்தில்தான் தனது கட்சியின் தனியொரு உறுப்பினராக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த ஐந்து தடவைகள் பிரதமாக இருந்த ரணில் விக்கிரமசிங்க சவாலை ஏற்று ஆளும் கட்சிக்கு தனது தலைமைத்துவத்தை வழங்க முன்வந்தார்.

போராட்ட இயக்கத்தை படைபலத்தை பயன்படுத்தி ஒடுக்கியமை, அரசாங்கத்தின் அண்மைய வரிக்கொள்கை மற்றும் ஊழல் தொடர்பில் உறுதியான கொள்கையின்மை என்று ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவின் சில நடவடிக்கைகள் கடுமையான கண்டனத்துக்குள் ளாகியிருக்கின்றன. ஆனால், ஜனாதிபதி அரசாங்கத்தின் கடிவாளத்தை தனது கையில் எடுத்த பிறகு போராட்ட இயக்கத்துக்கான ஆதரவு வெகுவாக குறைந்து போனதுடன், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வெளியில் வருபவர்களின் எண்ணிக்கையும் குறைந்தது.

கடுமையான பொருளாதார இடர்பாடுகள் தங்களது நுகர்வையும் சேமிப்புகளையும் பெருமளவில் குறைத்துக்கொள்ள மக்களை நிர்ப்பந்திக்கிறது. குறைந்தபட்சம் தற்போதைக்காவது மக்கள் இடர்பாடுகளை மௌனமாக பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள். கைத்தொழில் பகுதிகளில் ஆங்காங்கே சிறிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், அவை பலமிக்க போராட்ட இயக்கமாக மாறுவதற்கான அறிகுறிகளை இன்னமும் காணவில்லை.

விரைவில் பொருளாதார மீட்சி பற்றிய நம்பிக்கையும் பாதுகாப்புப் படைகள் பற்றிய பயமும் பெரும் எடுப்பிலான இன்னொரு சுற்று போராட்டத்துக்கு தயங்கும் மக்களின் விருப்புகளை தொடர்ந்து அடக்கிக்கொண்டிருக் கின்றன. இருந்தபோதிலும், போராட்ட இயக்கம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது மக்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் இருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் இப்போது கூட மக்களுக்கு பயந்தவர்களாகவே இருக்கிறார்கள். தாங்கள் கடந்த காலத்தில் கடைப்பிடித்த அடிப்படை நிலைப்பாடுகளுக்கு எதிராக தற்போது செயற்படவேண்டியிருந்தாலும் கூட ஒன்றிணைந்து நிற்பதற்கு அவர்கள் விரும்புகிற்ர்கள் போன்று தெரிகிறது.

வடக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்கள் ஒட்டப்பட்டிருந்த விளம்பரப் பலகை ஒன்றின் மீது அழுகிய தக்காளிப்பழங்களை பெண்கள் வீசுவதை காண்பிக்கும் பதிவுகளை பார்க்கக்கூடியதாக இருந்தது. அத்தகைய நிலை தென்பகுதியிலும் உள்ளது. தங்களது நிலைப்பாடுகளில் ஏற்பட்ட மாற்றத்தை நியாயப்படுத்திய அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன, "நாடுகளின் கடனை திருப்பிச்செலுத்தும் ஆற்றல் பற்றி மதிப்பிடும் சர்வதேச நிறுவனமான ஃபிட்ச் இலங்கையை மீண்டும் தரம் குறைத்திருக்கிறது. இலங்கையை யார் ஆட்சி செய்தாலும் அவர்கள் அதே பிரச்சினையை எதிர்கொள்வார்கள். நாம் எமது வெளிநாட்டு நாணய கையிருப்பதை கட்டியெழுப்பவேண்டியது அவசியமாகும்'' என்று கூறினார்.

**முன்கூட்டியே தயாரான தீர்வு**

இத்தகைய இடர்மிக்க சூழ்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாமதமின்றி நாட்டின் இனநெருக்கடிக்கு தீர்வைக்கண்டு தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டுவரும் தனது நோக்கத்தை அறாவித்திருக்கிறார். இதற்கு அவர் இலங்கை அதன் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடப்போகும் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியை இலக்காக தெரிவுசெய்திருக்கிறார். இது சாத்தியமற்ற ஒரு கனவு என்று நிராகரிக்கப்படக்கூடும்.

இனநெருக்கடி என்பது பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நீடித்துவருகின்ற ஒன்றாகும். இந்நெருக்கடி சுதந்திரத்துக்கு வெகு முன்னதாகவே காலனித்துவ ஆட்சியாளர்களினால் அடையாளம் காணப்பட்டதாகும். இலங்கையின் தலைவர்கள் சிலரால் முன்வைக்கப்பட்ட சுயாட்சிக்கான கோரிக்கைக்கு பதிலளித்த காலனித்துவ ஆட்சியாளர்கள், "இலங்கையில் வாழ்பவர்கள் ஐக்கியம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வை பெருமளவுக்கு வெளிக்காட்டியிருந்தால் முழுமையான பொறுப்புவாய்ந்த அரசாங்கத்தை அவர்களிடம் கையளிப்பதற்கு இருக்கக்கூடிய தடை நீங்கியிருக்கும்'' என்று குறிப்பிட்டனர்.

பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளினால் அடையாளம் காணப்பட்ட இலங்கை சமூகத்தின் பிளவுபட்ட தன்மையை இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. 1957 பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த 1965 டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தையும் நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை ஓரளவுக்கு மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டது. 2000 சந்திரிகா குமாரதுங்கவின் அரசியலமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் எரிக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் 2010 சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனைகளை அரசாங்கம் பரிசீலனைக்குக் கூட எடுக்கவில்லை. சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்க காலத்தில் 2015 அரசியலமைப்புச்சபை பல்வேறு யோசனைகளை முன்வைத்தது.

மறுவார்த்தைகளில் கூறுவதானால், இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு பல தடவைகள் தயாரிக்கப்பட்டன. அந்த தீர்வுகள் அந்தந்த காலகட்டங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்களினால் அல்லது அவற்றில் இருந்த சில பிரிவினரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலையும் இருந்தது. ஆனால், எதிரணியினால் நிராகரிக்கப்பட்டன.

இத்தடவை இலங்கையின் வரலாற்றிலேயே மிகவும் தீவிரமான இராணுவவாத - இனத்துவ தேசியவாத கட்சி என்று அடையாளப்படுத்தக்கூடிய பொதுஜன பெரமுன அதன் குறுகியகால உயிர்வாழ்வுக்காக இனவாதமற்ற ஓர் அரசியல் தலைவர் மீது தங்கியிருக்கிறது. இது மீண்டும் வரமுடியாத ஒரு வாய்ப்பாகும். இதை பயன்படுத்தவேண்டியது அவசியம்.

அடுத்த சுதந்திர தினத்தன்று இனநெருக்கடிக்கு தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்யும் அறிவிப்பானது பட்ஜெட்டை நிறைவேற்றியதில் காட்டிய செயல்திறமையை இனநெருக்கடிக்கான அரசியல் தீர்விலும் காட்டமுடியும் என்ற அவரது நம்பிக்கையை பிரதிபலிப்பதாக இருக்கலாம். அந்த தீர்வுக்கான திட்டங்கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

நாடு ஒன்றுபட்டுச் செயற்படாவிட்டால் எதிர்காலம் என்று ஒன்று இருக்கமுடியாது. தற்போதைய நெருக்கடியை நாடு கையாள ஒன்றுபடுவதற்கு அரசியல் தீர்வு அடிப்படை என்று தோன்றுகிறது.

# 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் 16ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும்



'தேசத்தின் குரல்' மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 16ஆம் ஆண்டு நினைவுநாள் தமிழர் தேசம் எங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் அரசியல் நகர்வுகளில் தமிழீழ தேசியத்தலைவருக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டு 2006ஆம் ஆண்டு 12ஆம் மாதம் 14ஆம் திகதி ஆயிரம் மாவீரர்களுடன் இணைந்து தமிழீழத்தின் 'தேசத்தின் குரலாக' தமிழீழத் தேசியத் தலைவரால் மதிப்பளிக்கப்பட்டு தமிழீழ விடியலில் வரலாறானார்.

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு தமிழீழ மக்கள், விடுதலைப்போராட்டப் பாதையில் இன்றும் நிரப்பமுடியாத இடமாக காணப்படுகின்றது. தமிழீழ தேசியத்தலைவர் ஆழமாக நேசித்த ஒரு விடுதலை வீரனாக அன்ரன் பாலசிங்கம் காணப்பட்டார்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் தொடக்க காலத்தில் இருந்து செயற்பட்ட பாலா அண்ணா விடுதலை இயக்கத்தின் பிதாவாக காணப்பட்டார்.

தமிழீழ தேசியத்தலைவருக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் உலக போராட்ட வரலாறுகளை எடுத்துக் கூறி பல்வேறு நாடுகளின் அரசியலாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதனூடாக விடுதலைக்கான முயற்சிகளை மேற்கொண்டதில் முதன்மையானவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனது துணைவியையும் இணைத்துக் கொண்ட ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, தத்துவ ஆசிரியராக, தமிழீழ தேசியத்தலைவர் அருகில் இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமளித்துள்ளார்.

பரந்து வாழும் உலகத்தில் தமிழ் மக்கள் பெருமை கொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் முடிவில்லா சாதனை புரிந்து தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பெரும் போராட்டப்பணிக்காக தமிழீழத் தேசியத் தலைவர், 'தேசத்தின் குரல்' என்ற மாபெரும் மதிப்பை வழங்கி கௌரவித்தார். தாயகத்தில் போர் உக்கிரம் பெற்ற காலகட்டப் பகுதிகளில் தாயகத்தில் இருந்து கொண்டு அரசியல் செயற்பாடுகளை நகர்த முடியாத சூழலிலும் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டும் கடற்புலிகளின் சிறப்பு பாதுகாப்புடன் கடல் வழியாக பன்னாடுகளுக்கும் சென்று தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளை எடுத்து கூறி, 2002 ஆம் ஆண்டு இலங்கை அரசுடன் ஏற்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டிற்கு முதன்மை வகித்தார். இலங்கை அரசு போர் நிறுத்த மீறல்களை மேற்கொண்டு தமிழர் தாயகப் பரப்பில் அத்துமீறிய போர் நடவடிக்கையை மேற்கொண்ட கால கட்டப்பகுதியான 2006ஆம் ஆண்டு காலகட்டத்தில் உடல் உபாதையால் பாதிப்புற்ற அன்ரன் பாலசிங்கம் 2006ஆம் ஆண்டு மார்கழி 14ஆம் திகதி தமிழ் மக்களை விட்டுப் பிரிந்து சென்றார்.

## இன்றைய நாளில்...

- 1782 – மொண்ட்கோல்பியர் சகோதரர்கள் ஆளில்லா வெப்பக்காற்று பலூனை முதன்முதலில் பிரான்ஸில் பரிசோதித்தனர். 2 கி.மீ. உயரம்வரை இது பறந்தது.
- 1884 – இலங்கையில் இடம்பெற்ற பெரும் சூறாவளி காரணமாக யாழ்ப்பாணத்தில் பெரும் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன.
- 1899 – யாழ். பொது மருத்துவமனையை தனியாரிடம் இருந்து இலங்கை அரசு பொறுப்பேற்றுக் கொண்டது.
- 1900 – குவாண்டம் இயங்கியல்: மேக்ஸ் பிளாங்க் கரும்பொருள் கதிர்வீச்சு பற்றிய தனது பிளாங்கின் விதியை நிறுவினார்.
- 1903 – அமெரிக்காவின் வட கரொலைனா மாநிலத்தில் ரைட் சகோதரர்கள் தமது ரைட் பிளையர் வானூர்தியை முதல் தடவையாக பரிசோதித்தனர்.
- 1962 – நாசாவின் மரைனர்-2 விண்கலம் வெள்ளிக் கோளை அண்மித்தது. இதுவே வெள்ளியை அண்மித்த முதலாவது விண்கலமாகும்.
- 2003 – பாகிஸ்தான் அரசுத்தலைவர் பெர்வேஸ் முஷாரப் கொலை முயற்சி ஒன்றிலிருந்து உயிர் தப்பினார்.

## நக்கல் நமசிவாயம்

எலெக்சன் வருமெண்டா இண்டைக்கு ஊர்வழிய களைகட்டி திருவிழா ரேஞ்சுக்கு நிகழ்ச்சியள் இருந்திருக்கும்... ஆனா, அப்படி எதுவும் மருந்துக்கு கூட காணேல்ல பாருங்கோ..!



# அமைச்சரவை முடிவுகள்

## 2022.12.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

අමාත්‍ය මණ්ඩල තීරණ
அமைச்சரவை முடிவுகள்
CABINET DECISIONS
රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

**01. அம்பாறை மற்றும் மன்னார் நகர சபைகள், மாநகர சபைகளாக தரமுயர்த்துதல்**

தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி, மேலதிக நிதியைச் செலவிடாமல் ஒருசில மாவட்டங்களில் காணப்படும் நகரங்களை மாநகர சபைகளாக தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2022.08.08ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அங்கீகாரத்தை கருத்திற்கொண்டு அம்பாறை மற்றும் மன்னார் மாவட்டங்களில் பிரதான நகர சபைகளாகக் காணப்படும் அம்பாறை மற்றும் மன்னார் நகர சபைகள் ஆகிய இரண்டு சபைகளிலும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திப் பணிகளை இலகுபடுத்துவதற்காக குறித்த நகர சபைகளை மாநகர சபைகளாக தரமுயர்த்துவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. பாடசாலை மாணவர்களுக்கான உளவிழிப்புணர்வு (Mindfulness) நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்தல்**

கல்வி அமைச்சு மற்றும் உளவிழிப்புணர்வு பாடசாலையின் (Mindful School) ஸ்தாபகர் வணக்கத்திற்குரிய உடஈரியாகம தம்மஜீவ தேரரின் உளவிழிப்புணர்வு மன்றம் இணைந்து உளவிழிப்புணர்வை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தைப் பாடசாலை மாணவர்களுக்கு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்ச்சித் திட்டமானது, சிக்கலாகவும் வேகமாகவும் இயங்கி வருகின்ற சமூகத்திற்கு முகங்கொடுத்து மாணவர்கள் தமது ஆளுமையை விருத்தி செய்துகொள்வதற்குத் தேவையான அனுபவத்தை பாடசாலையிலேயே வழங்கி, அவர்களின் தவறான நடத்தைகளைத் தடுப்பதற்கு ஏதுவாக அமையும். இக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, 2023 ஜனவரி மாதம் 04ஆம் திகதி தொடக்கம் 2023 மார்ச் மாதம் 24ஆம் திகதிவரை ஒவ்வொரு புதன்கிழமையும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கும், பின்னர் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 7.30 மணி தொடக்கம் 7.40 மணிவரைக்கும் 10 நிமிடங்கள் நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. நீர் மற்றும் மலக்கழிவகற்றல் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் தொடர்பாக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நீர்வழங்கல் அமைச்சு மற்றும் மாலைதீவு குடியரசின் சுற்றாடல், காலநிலை மாற்றம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இலங்கை மற்றும் மாலைதீவுக்கும் இடையில் நீர் மற்றும் மலக்கழிவகற்றல் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வரைபுக்கு வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும், சட்ட மா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய உத்தேசிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 1978ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம்**

வடமாகாண சபையால் விதிக்கப்பட்டுள்ள நிதிசார் நியதிச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நீதிமன்ற அதிகாரங்களை அமுல்படுத்துவதற்காக வட மாகாண நீதிமன்றங்களுக்கு இயலுமை கிட்டும் வகையில் நீதித்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் 2021.07.30 அன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த ஒழுங்குவிதிகளை நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக 2021.12.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்தை எதிர்பார்த்திருந்தபோது, குறித்த நிதிசார் நியதிச்சட்டங்களை அமுல்படுத்தும் செயன்முறையை வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களிலும் சமாந்தரமாக அமுல்படுத்த வேண்டுமென அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, கிழக்கு மாகாண சபையால் விதிக்கப்பட்டுள்ள எந்தவொரு வரி மற்றும் தீர்வையை விதிப்பதற்கான நிதிசார் நியதிச்சட்டம் தொடர்பாக மேலெழுகின்ற அனைத்து வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும், விடயங்களையும் விசாரணை செய்து நிச்சயிப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களையும் பெயர் குறிப்பிட்டு நீதித்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நீதி அமைச்சரால் ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. பாலியல் தொல்லைகள், பாலியல் தொந்தரவுகள், பாலியல் இலஞ்சம் மற்றும் குறித்த குற்றச்செயல்களுக்கு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கல் மற்றும் தற்போதுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகளை வலுப்படுத்தல்**

பாலியல் தொல்லைகள், அடிப்படை மனித உரிமை மற்றும் சுதந்திரம் மீறப்படுவதுடன், அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக்கோவையின் 345ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த குற்றத்திற்காக தண்டனை வழங்குவதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பினும், இப்பிரச்சினை தொடர்ந்து நிலவுகின்றமை கண்டறிப்பட்டுள்ளது.

அதனால், பாலியல் தொல்லைகள் மற்றும் அனைத்துவித பாலியல் தொந்தரவுகளைக் குற்றச் செயலாகக் கருதுகின்ற உறுப்புரையை தண்டனைச் சட்டக்கோவையில் உட்சேர்ப்பதற்கும், அதற்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கும் மற்றும் பாலியல் இலஞ்சத்தை குற்றமாக்குவதற்கும் புதிய உறுப்புரைகளை உட்சேர்த்து தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்தம் செய்வதற்கு இயலுமாகும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை ஒழுங்குவிதிகளுக்கான கொள்கை ரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்**

2009.04.02 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை ஒழுங்குவிதிகள் சமகால தேவைகளுக்குப் பொருத்தமான வகையிலும் மற்றும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்குகின்ற வகையிலும் மீண்டும் சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த நடவடிக்கை முறை பற்றிய வரைபு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குழுவால் மேலும் ஆராயப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகளை உட்சேர்த்து இறுதி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தயாரிக்கப்பட்டுள்ள அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை ஒழுங்குவிதிகளுக்கு அரசியலமைப்பின் 55(1) உறுப்புரையின் பிரகாரம் கொள்கை ரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், குறித்த நடவடிக்கை முறை ஒழுங்குவிதிகளை 2023.01.01 அன்று தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்காகவும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. அரசியலமைப்பு 104ஆ(5)(அ) இன் கீழ் தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டி நெறிகளை சட்டமாக்கல்**

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவால் 2178/24 மற்றும் 2020.06.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஊடக வழிகாட்டி நெறிகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனாலும் ஊடக வழிகாட்டி நெறிகள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்பாடுகள் இதுவரை விதிக்கப்படவில்லை. குறித்த ஊடக வழிகாட்டி நெறிகள் மீறப்படுவதை தேர்தல் குற்றமாக குறித்துரைக்கப்படும் ஏற்பாடுகள், ஜனாதிபதியை தெரிவுசெய்தல் (விசேட ஏற்பாட்டு) சட்டம், நாடாளுமன்ற தேர்தல்கள் சட்டம், மாகாண சபைத் தேர்தல் சட்டம், உள்ளூராட்சி அதிகாரசபை வாக்கெடுப்பு கட்டளைச் சட்டம் போன்ற சட்டங்களில் வாக்கெடுப்புக்கு ஏற்புடையதான சட்டங்களின் கீழ் சட்டவிரோத செயலாகக் கருதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகுமாறு குறித்த ஏற்பாடுகளை உள்ளடக்கி சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தை திருத்தம் செய்தல்**

1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(8) உறுப்புரையின் பிரகாரம் தேர்தலொன்றின் போது தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிக் கோவையானது தேர்தல் ஆணைக்குழுவால் 2178/25 மற்றும் 2020.06.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த ஒழுக்கநெறி மீறப்படும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய படிமுறைகள் மற்றும் குறித்த படிமுறைகள் பதவிக்காலம் வரை நடைமுறையிலுள்ளமையைக் குறித்துரைக்கும் ஏற்பாடுகளை உட்சேர்ப்பதற்கும், அடையாளங் காணப்படும் விசேட பதவிகளை வகிக்கின்ற நபர்களுக்கு தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே விசேட நிலையமொன்றில் தேர்தல் தினத்தில் வாக்களிப்பதற்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு இயலுமாகுமாறு 1981ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்தம் செய்வது பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, அதற்கான ஏற்பாடுகளை உட்சேர்த்து குறித்த சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

# சிங்கள கலாசார முறைப்படி திருமணம் செய்துகொண்ட பிரித்தானிய ஜோடி



பிரித்தானியாவைச் சேர்ந்த காதலர்கள் இருவர் களுத்துறை கட்டுகுருந்தவில் சிங்கள கலாசார முறைப்படி திருமண வாழ்க்கையை ஆரம்பித்தனர்.

இங்கிலாந்தின் Leicestershireஇல் வசிக்கும் 56 வயதான ரூபர்ட் ஜூலியன் மற்றும் 53 வயதான நிக்கி ஜேன் ஆகியோருக்கே இந்தத் திருமணம் நடைபெற்றது.

களுத்துறை கட்டுகுருந்த கடற்கரைக்கு அருகிலுள்ள சுற்றுலா ஹோட்டலில் நடைபெற்ற திருமண நிகழ்வில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து அவர்களின் நெருங்கிய நண்பர்கள் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 13.12.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 130 4678 | 142 600 |
| கனேடியன் டொலர் | 151 4 50 | 163 5452 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 6208 | 42 7700 |
| யூரோ | 267 270 | 282 5387 |
| ஜப்பான் யென் | 1 5 04 | 1 60 6 |
| சிங்கப்பூர் டொலர் | 153 3087 | 164 7022 |
| ஸ்ரேலிங் பவுன் | 33 4106 | 346 5 84 |
| சுவிஸ் பிரான்ங் | 270 214 | 3 0241 |
| ஐ.அ.டொலர் | 250 0862 | 260 6080 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 1672 |
| குவைட் | குவைட் தினார் | 0,071 8086 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 1646 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 8453 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4536 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7645 |

# Elegance மற்றும் Excelsior திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ள மக்கள் வங்கி




இலங்கையின் முதன்மையான, உரிமம் பெற்ற வர்த்தக வங்கியான மக்கள் வங்கி, Elegance மற்றும் Excelsior என்ற நாமங்களில் இரண்டு புதிய தயாரிப்பு வழங்கல்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அதன் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வாழ்க்கை முறை தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட விரிவான வங்கிச் சேவை தீர்வுகளை வழங்குகிறது. Elegance என்பது ஒரு தனிப்பட்ட வங்கிச் சேவை வசதியாகும். இது செல்வந்தர்களின் வாழ்க்கைக்கு கூடுதல் மதிப்பு சேர்க்கும். Excelsior என்பது கூடுதல் தொகையிலான சம்பளம் பெறுபவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட வங்கிச் சேவைத் திட்டமாகும்.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவரான சுஜீவ ராஜபக்ஷ இரண்டு தயாரிப்புகளின் அறிமுக நிகழ்வில் உரையாற்றுகையில்,

எமது ஸ்தாபகக் கோட்பாடுகளை உண்மையாகக் கடைப்பிடிக்கும் அதேவேளை, மாறிவரும் காலங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப நாம் வேகத்துடனும், விவேகத்துடனும் செயற்பட்டு வருகிறோம். Elegance மற்றும் Excelsior ஆகியவற்றின் அறிமுகமானது எமது பயணத்தில் ஒரு முக்கிய சாதனை இலக்கைக் குறிக்கிறது. வாடிக்கையாளர்கள் சௌகரியம், நெகிழ்வுத்தன்மை, அங்கீகாரம் மற்றும் தனிப்பட்ட அனுபவம் ஆகியவற்றைத் தேடியே வங்கிகளுக்கு வருகிறார்கள்.

அதனாலேயே மக்கள் வங்கியில் நாம் அதிசிறந்த தொழில்நுட்பம், வர்த்தக நாமமிடல் மற்றும் மகத்துவமான சேவை ஆகியவற்றில் அதிகளவில் முதலீடு செய்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான ரஞ்சித் கொடித்துவக்கு இரண்டு புதிய தயாரிப்பு வழங்கல்களைப் பற்றி கருத்து வெளியிடுகையில்,

வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்க்கை முறை தேவைகளுக்கு பொருந்தக்கூடிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நாடுவது அதிகரித்துள்ளது. மக்கள் வங்கியில், நாம் இதை அடையாளம் கண்டு, Elegance என்ற தனிப்பட்ட வங்கிச் சேவை முன்மொழிவு மற்றும் Excelsior என்ற கூடுதல் தொகையில் சம்பளம் பெறுபவர்களுக்காக உருவாக்கப்பட்ட வங்கிச் சேவைத் திட்டம் ஆகியவற்றை வடிவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

திகதி 12.12.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4967
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,101,780.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 1 1 2 2 6 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,710,564.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3209
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,734,480.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 35 42 46 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,152,842.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1422
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,210,520.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 4 8 1 5 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,949,797.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 997
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,553,820.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 17 51 59 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 136,509,294.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 276
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,119,100.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 12 13 34 57
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,615,367.00

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1315
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,589,420.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.285,956,258.00
V 08 41 59 64 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# மலையக சமூகத்தின் சமகால பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நுவரெலியாவில்



(நுவரெலியா மேலதிக நிருபர்)

மலையக மக்களின் சமகால நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நுவரெலியாவில் அண்மையில் நடைபெற்றது. மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் விரிவுரையாளருமான எஸ். விஜயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடல் இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் ரூபி வுட்சைட்டுடன் இடம் பெற்றது.

இதன்போது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அரசியல், வேலைவாய்ப்பு, சம்பளம், குடியிருப்பு, கல்வி, சுகாதாரம், நுவரெலியா மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் கிராமசேவகர் பிரிவுகள், மாகாணசபை தேர்தல் உட்பட மலையக சமூக பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. அத்தோடு மலையக மக்களின் சமகால நிலைமைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான ஓர் ஆவணமும் இக்கலந்துரையாடலின்போது கையளிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் ஏ.லோரன்ஸ், தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். இராஜாராம், இளைஞர் அமைப்பு செயலாளர் சுரேன் கதிர்காமபிள்ளை, தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதிநிதியான ஹட்டன் -டிக்கோயா நகரசபையின் முன்னாள் தலைவரும் தற்போதைய உறுப்பினருமான வைத்தியர் நந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நீரில் மூழ்கி மாணவன் பலி

(பசறை நிருபர்)

பதுளை நகரத்தை அண்மித்த மெதிரிய நீர்நிலையில் நீராடச் சென்ற மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நிலக்ஷன் என்ற 16 வயது மாணவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இவர் நேற்று பகல் நண்பர்கள் அறுவருடன் குறித்த நீர்நிலையில் நீராடிக்கொண்டிருந்தபோதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். அயலவர்களின் உதவியுடன் மாணவனின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பதுளை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நீர்நிலையில் நீராடிய மாணவர்கள் அனைவரும் பதுளையிலுள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர்த்தேக்கத்தில் வயோதிப பெண்ணின் சடலம் மீட்பு

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

காசல்ரீ நீர்த்தேக்கத்திலிருந்து நேற்றுக் காலை சடலமொன்று மீடகப்பட்டுள்ளது. ஹட்டன், கார்பெக்ஸ் பிரிவைச் சேர்ந்த 75 வயது மதிக்கத்தக்க திருமணமாகாத வயோதிபப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று மாலை காணாமல்போய், அவரது உறவினர்கள் இரவுவரை தேடியும் எவ்வித தகவலும் கிடைக்கப்பெறாத நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஆறுமுகம் கமலம் என்ற அப்பெண்ணின் சடலம் காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அண்டியுள்ள சனசமூக நிலை கட்டடத் தொகுதிக்கு அருகிலேயே மீட்கப்பட்டுள்ளது. மு.ப. 11.45 மணியளவில் சடலம் பிரதேச பரிசோதனைக்காக டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது. மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சதுரங்கப் போட்டியில் சாதனை படைத்த பதுளை மாணவி



(பசறை நிருபர்)

இலங்கை சர்வதேச சதுரங்க சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசிய நாடுகளுக்கிடையிலான பாடசாலை மட்டத்திலான, ஒன்பது வயதிற்குட்பட்ட சர்வதேச சதுரங்க போட்டி-2022 இம்மாதம் 3ஆம் திததி முதல் 11ஆம் திகதிவரை இடம்பெற்றிருந்தது.

சர்வதேச ரீதியில் 12க்கும் மேற்பட்ட நாடுகளின் மாணவர்கள் கலந்துகொண்ட இப்போட்டியில் ஊவா மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய பதுளை, சசெக்ஸ் தனியார் கல்லூரியில் தரம்-4இல் கல்வி கற்கும் பிரதீப்குமார் ஆத்ரா மூன்றாம் இடத்தைப் பெற்றதோடு, மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் சிறந்த போட்டியாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சிறு வயதிலேயே சர்வதேச ரீதியில் பங்குபற்றி மலையக சமூகத்திற்கும் முழு நாட்டிற்கும் பெருமை தேடித்தந்த பிரதீப்குமார் ஆத்ராவிற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பிரதேசவாழ் மக்கள் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

# கல்வித்துறை மனிதவள மென்பொருள் செயற்றிட்டத்துக்கு சர்வதேச விருது







(பலாங்கொடை மேலதிக நிருபர்)

சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஆரம்பித்து வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற கல்வித் துறையில் மனிதவள முகாமைத்துவ மற்றும் கணினி மென்பொருள் தகவல் செயற்றிட்டத்துக்கு எபிக்டா அவோர்ட்ஸ் (Epictar Awards) சர்வதேச விருதும் தங்கப்பதக்கமும் கிடைக்கப்பெற்றுள்ளது. பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் நகரில் இடம்பெற்ற சர்வதேச போட்டி நிகழ்ச்சியிலேயே இவ்விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

சர்வதேச நாடுகள் கலந்துகொண்ட எபிக்டா 2022 விருது வழங்கும் போட்டியில் இலங்கையின் மேற்படி செயற்றிட்டத்துக்கு முதலிடம் கிடைத்துள்ளது. தகவல் தொழில்நுட்பத்துறையில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டியிலும் இத்திட்டம் முதலிடம் பெற்று பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

2017ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப் பட்டு சப்ரகமுவ மாகாணத்தின் கல்வித்துறை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வரும் இத்திட்டத்துக்கு மாகாண சபை அனுசரணை வழங்கியுள்ளது. இச்செயற்றிட்டத்தை சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தின் இளம் கல்விப் பணிப்பாளர்களான அனுராத லக்மால், அன்பாஸ் தாவுஸ் ஆகியோர் வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.










கண்டி, குண்டசாலை விவேகானந்தா வித்தியாலயத்தில் பிரமுகர்கள் கௌரவிப்பு மற்றும் மாணவ தலைவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வு என்பன கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றன. இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தைச் சேர்ந்த சேவாஜோதி எஸ்.முத்தையா, சுந்தரமூர்த்தி, பழனியப்பன் உட்பட பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். நிகழ்வில் மங்கல விளக்கேற்றப்படுவதையும் வர்த்தகர் சுந்தரமூர்த்தி மற்றும் பழனியப்பன் ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் கலை நிகழ்வொன்றையும் படங்களில் காணலாம். (கண்டி நிருபர்கள்)

# மன்னாருக்கு 3 நாடுகளின் தூதுவர்கள் விஜயம்





(மன்னார் நகர் நிருபர்)

மன்னாருக்கு நேற்று முன்தினம் (12) மாலை விஜயம் செய்த வியட்நாம் தூதுவர் ஹோ தி தன் ட்ரூக், இந்தோனேசிய தூதுவர் தேவி குஸ்டினா, தாய்லாந்து தூதுவர் போஜ் ஹன் போலின் ஆகியோர் தலைமன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

தலைமன்னார் சென்ற குறித்த தூதுவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்கு சென்று அங்கிருந்து மணல் திட்டுகளைப் பார்வையிடச் சென்றனர்.

கடற்படையின் விசேட படகுகளில் குறித்த தூதுவர்கள் பாதுகாப்பாக தீடைகளை பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.

# மானிப்பாயில் 2400 கிலோ மஞ்சளுடன் இருவர் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக பெருந்தொகையான மஞ்சளை கடத்திச் சென்ற இருவரை நேற்று முன்தினம் (12) மானிப்பாய் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தியாவின் தமிழகத்திலிருந்து 2400 கிலோ மஞ்சள் கடத்தி வரப்பட்டு விற்பனைக்காக கொண்டுசென்ற நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது,

ஆனைக்கோட்டைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வகையில் பயணித்த வாகனமொன்றை பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டபோதே



பெருந்தொகையான மஞ்சள் மீட்கப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரும் சுதுமலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.

## ‘உடல் ரீதியான தண்டனையிலிருந்து சிறுவர்களை பாதுகாத்தல்’

# கிளிநொச்சி மாவட்ட அதிபர்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவால் செயலமர்வு





(மு.தமிழ்ச்செல்வன்)

‘சிறுவர் உரிமைகள், உடல் ரீதியான தண்டனையிலிருந்து சிறுவர்களை பாதுகாத்தல்’ எனும் தலைப்பில் கிளிநொச்சி தெற்கு மற்றும் வடக்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த அதிபர்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தினால் செயலமர்வொன்று நடத்தப்பட்டது. சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரண்டு வலயங்களைச் சேர்ந்த 100இற்கும் மேற்பட்ட அதிபர்களுக்கு இச்செயலமர்வு நேற்று முன்தினம் (12) கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் நடத்தப்பட்டது.

இதில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் மேற்படி தலைப்புகள் தொடர்பில் அதிபர்களுக்கு விரிவுரையாற்றினார்.

அத்துடன், கிளிநொச்சி வடக்கு, தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கிளிநொச்சி மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட இணைப்பாளர், மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் ஆணைக்குழுவின் அலுவலர்களும் கலந்துகொண்டு தங்களது கருத்துகளை வழங்கியிருந்தனர்.

# கண்டாவளையில் இடியன், கட்டுத்துவக்கு, ரி56 துப்பாக்கி தோட்டாக்களுடன் ஒருவர் கைது!



(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை கோணங்குளம்பகுதி வீடொன்றிலிருந்து இடியன் துவக்கு 3, கட்டுத்துவக்கு 11, இடியன் துவக்கின் பட் 5, ரி56 துப்பாக்கி தோட்டாக்கள் 250, ஈய குண்டுகள் 8, பட்டாசு வெடிகள் 16, பன்றி இறைச்சி 8 கிலோ, உடும்பு தோள் போன்ற பொருட்களுடன் 31 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்த்துறையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து கிளிநொச்சி 57 படைப்பிரிவின் கீழ் உள்ள 9ஆவது சிங்க படைப்பிரிவு விசேட அதிரடிப்படையினர் மற்றும் வனஜீவராசி திணைக்களம் இணைந்து சந்தேகத்துக்கிடமான வீட்டை சோதனையிட்ட போதே வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

# சாவகச்சேரியில் கஞ்சாவுடன் இருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் (12) பிற்பகல் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களிடமிருந்து ஒன்றரை கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ள நிலையில், கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்தவிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மன்னாரில் போதையால் ஏற்பட்ட கொலை: மூவர் கைது; ஒருவர் தலைமறைவு!

(மன்னார் நகர் நிருபர்)

தொழில் நிமித்தம் மன்னார் பேசாலையில் குடியிருந்தவர்கள் ஒன்றுகூடி மது அருந்திய வேளையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்ற சம்பவத்தில் ஒருவர் தாக்கப்பட்டு மரணித்த சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, மேலும் ஒருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் பொலிஸார் தேடி வருகின்றனர்.

பேசாலை பகுதியில் கடந்த வியாழக்கிழமை (08) இரவு இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக மன்னார் மரண விசாரணை அதிகாரி எஸ்.ஈ.குணகுமார் மரண விசாரணையை மேற் கொண்டுள்ளார். இதன்போது மேலும் தெரிய வருகையில்,கொலை செய்யப்பட்டவர் கொழும்பைச் சேர்ந்த சுப்பையா ஆறுமுகம் சங்கர் (வயது -40) என தெரியவந்துள்ளது.

இவர் கிளிநொச்சிக்கு தொழிலுக்குச் சென்ற வேளையில் அங்கு ஜெயபுரத்தில் ஒரு பெண்ணை திருமணம் செய்த பின்னர் பேசாலை பகுதிக்கு தொழிலுக்கு குடும்பத்துடன் வருகைதந்து வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார்.

சம்பவ தினத்திற்கு முதல் நாள் இறந்த நபரின் மனைவி கொழும்புக்குச் சென்றுள்ளார். இந்த நேரத்தில் ஒன்றாக தொழில் புரிபவர்கள் ஒன்றுசேர்ந்து மது அருந்தியபோது ஏற்பட்ட கைகலப்பில் குறித்த குடும்பஸ்தர் தாக்குதலுக்குள்ளாகி மரணித்துள்ளார்.

இந்தச் சம்பவமானது சில தினங்களுக்குமுன் வளிமாசு காரணத்தால் ஏற்பட்ட இயற்கை குளறுபடியால் எவரும் கணக்கில் எடுக்காத நிலையில் மறுநாள் (09) காலையே பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டு பின் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டபோது குறித்த நபர் இறந்துள்ளது மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்ட பின் உறவினர்களிடம் உடல் சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கொலை தொடர்பாக மூவர் சந்தேகத்தின் நிமித்தம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள் ளதுடன், தலைமறைவாகிய ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நால்வர் ஆயுதங்களுடன் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நால்வர், வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே அவர்கள் வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரையும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களையும் மேலதிக நடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸாரிடம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கையளித்துள்ளனர்.

# கொள்ளுப்பிட்டி கோர விபத்தின் பின்னர் தப்பிய சந்தேகநபர் கட்டுநாயக்கவில் கைது



கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற கோர விபத்தின் பின்னர் வெளிநாட்டிற்கு தப்பிச்சென்றிருந்த சந்தேகநபர் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் மீண்டும் நாடு திரும்பியபோது கைதுசெய்யப் பட்டதாக பொலிஸார் கூறினர்.

கடந்த 10ஆம் திகதி கொள்ளுப் பிட்டி பிரதேசத்தில் சொகுசு காரொன்று முச்சக்கரவண்டியை மோதி விபத்துக்குள்ளாக்கியதில், முச்சக்கரவண்டியின் சாரதி உயிரிழந்தார்.

காரை செலுத்திய குறித்த சந்தேகநபர் அன்றைய தினமே துபாய்க்கு தப்பிச் சென்றிருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபருக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை பெறப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபர் நேற்று அதிகாலை மீண்டும் நாடு திரும்பிய சந்தர்ப்பத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 26 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை டிசம்பர் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# பேராதனை உபவேந்தர் மீதான தாக்குதல்; 10 மாணவர்கள் கைது

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்ன தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் நான்கு பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக மட்டத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து 12 மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், பிரதி உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

சி.சி.டி.வி. கெமராவின் உதவியுடன் குறித்த 12 மாணவர்களும் அடையாளம் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார். இச்சம்பவத்தின் காட்சிகள் மற்றும் இந்த விவகாரம் தொடர்பான விசாரணைகள் முடிவடையும் வரை அவர்களை இடைநீக்கம் செய்வதற்கான முடிவு நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.





**Assistant Director (Legal & Board Secretary)**

Institution: National Transport Commission
Requirements: Degree in Law/Enrollment of Attorney at law of the Supreme Court of Sri Lanka and 03 years of Experience
Apply: Chairman, National Transport Commission, No 241, Park Road, Colombo 05.

**Head of Branding and Communication**

Company: KPMG Executive Search Pvt Ltd.
Email: esearch@kpmg.com

**Medical Officers**

Institution: Ministry of Transport and Highways
Apply: The Chairman, National Transport Medical Institute, No 170, High Level Road, Nugegoda.

**Head Teacher**

Institution: Lion Gate College, Dambulla.
Email: rohithagems.hrm@gmail.com

**National Programme Officer / Project Coordinator**

Institution: IOM – UN Migration
Contract Type: Special Short Term
Apply: https://srilanka.iom.int/careers

**Assistant Managers (Up and Low country Regions)**

Company: Elpitiya Plantation PLC
Requirements: Minimum 05 years of experience with knowledge in tea and rubber
Apply: General Manager – Administration/ Legal, Elpitiya Plantation PLC, 9th floor, Aitken Spence Tower 01, Vauxhall Street, Colombo 02.
Email: greshan@aitkenspence.lk


# பெண்களைக் கடத்திய குஷானுக்கு பிணை

ஓமானுக்கு பெண்களை கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் இ.குஷானுக்கு பிணை வழங்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 29ஆம் திகதி அதிகாலை ஓமான் தலைநகர் மஸ்கட் நகரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோதே ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் கைதுசெய்யப்பட்டார்.

# பிரபல பாடகர் நிஹால் நெல்சன் காலமானார்



பிரபல சிங்கள பாடகர் நிஹால் நெல்சன் தனது 76ஆவது வயதில் நேற்று (13) காலமானார்.

உடல் நலக்குறைவு காரணமாக நீண்ட காலம் அவதிப்பட்டு வந்த அவர், நேற்று அதிகாலை ராவத்தாவத்த பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து காலமானதாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

# வியட்நாமில் உள்ள இலங்கைத் தூதரகம் சர்வதேச உணவுத் திருவிழாவில் பங்கேற்பு





வியட்நாமில் உள்ள இலங்கைத் தூதரகம், வியட்நாமின் வெளியுறவு அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டு, 2022 டிசம்பர் 11 அன்று ஹா நொய் நகரில் நடைபெற்ற வருடாந்த சர்வதேச உணவுத் திருவிழாவில் பங்கேற்றது.

இந்த வருடாந்த நிகழ்வின் 10ஆவது மாநாட்டில், இராஜதந்திரத் தூதரகங்கள், சர்வதேச நிறுவனங்கள், ஹா நொய் நகரில் உள்ள சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளியுறவு அமைச்சின் மாகாண அலுவலகங்கள், மாகாண அரசுகள் மற்றும் வியட்நாமிய பானங்கள் மற்றும் உணவுத்துறைத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் முக்கிய ஈர்ப்புகளில் ஒன்றாக இலங்கைக் கூடம் அமைந்திருந்ததுடன், உண்மையான இலங்கை உணவுகளான கொத்து ரொட்டி மற்றும் அப்பம் ஆகியவை நேரடியாக தயாரிக்கப்பட்டன.



131 கூடங்களை உள்ளடக்கிய உணவுத் திருவிழாவில் சுமார் 5000 பேர் கலந்துகொண்டனர். ஹா நொய் நகரம் மற்றும் வியட்நாமின் ஏனைய முக்கிய நகரங்கள் உட்பட மாகாணங்களில் உள்ள இலங்கை சமூகத்தினரும் இந்த நிகழ்வில் தீவிரமாக பங்கேற்றதுடன், மிகவும் வெற்றிகரமான ஊக்குவிப்பு நிகழ்ச்சியை நடத்துவதற்கு தூதரகத்திற்கு தாராளமான உதவிகளை நல்கினர்.

# மறைந்த ஆறுமுக நாவலர், மொஹிதீன் பெக், தென்னிந்திய நடிகர் பாரத் பூஷண் ஆகியோரின் ஞாபகார்த்த நிகழ்வு



























**(இக்பால் அலி)**

மறைந்த ஆறுமுக நாவலர், மொஹிதீன் பெக் தென்னிந்திய நடிகர் பாரத் பூஷண் ஆகியோருக்கான ஞாபகார்த்த நிகழ்வு கண்டியில் இடம்பெற்றது.

மலையக கலை கலாசார சங்கத்தினால் ஆறுமுகநாவலர், மொஹிதீன் பெக், தென்னிந்திய நடிகர் பாரத் பூஷண் ஆகியோருக்கான ஞாபகார்த்த நிகழ்வு கண்டி கெப்பிட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ராஜா ஜேன்கிஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கண்டி மாநகர முதல்வர் கேசர சேனநாயக்க கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் மறைந்த மொஹிதீன் பெக்கின் பாடல்கள் இசைக்கப்பட்டதுடன், பல்துறை சார்ந்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்

இதன்போது பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன், கண்டி மாவட்ட மனித உரிமை ஆணையாளர், சமூகத் தொண்டர் சிதம்பரநாதன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் சர்வதேச விருதைப் பெற்றுக்கொண்ட காமினி பண்டார மெனித்திவெல, கந்துரட்ட ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ரங்கன குணரட்ன, சிறுவர் இலக்கிய எழுத்தாளர் சோமசிறி தெனகம, சமூகப் பணியாளர்களான எப்.எம். நிஸார், ரினோஸா, எஸ்.ஏ.ஹாபி சில்மியா ஏ.ஆர்.எம். ரிமோஸா, தயரங்கனி, கவிஞர் மடவளை கலீல், ஊடகவியலாளர் ஜே. எம். ஹாபிஸ் உள்ளிட்ட பலர் கௌரவிக்கப்பட்டனர்.

# கிழக்கு மாகாணத்திலுள்ள 58 பாடசாலைகளுக்கு சீன அரசின் நிதியில் சூரிய மின்சக்தித் திட்டம்





(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் வேண்டுகோளின்பேரில் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு பாடசாலைகளுக்கு இலவசமாக சோலார் சக்தி மின் இணைப்புகளை வழங்குவதற்கு சீன அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கமைய கிழக்கு மாகாணத்திலுள்ள 58 பாடசாலைகளுக்கு தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான சோலார் சக்தி மின் இணைப்புகளை வழங்குவதற்கு சீன அரசாங்கம் முன்வந்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எட்டு பாடசாலைகளுக்கு சோலார் சக்தி மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயப் பிரிவிலுள்ள கோரகள்ளி மடு ஸ்ரீரமண மகரிஷி வித்தியாலயத்துக்கு சோலார் சக்தி மின் இணைப்புகளை வழங்கும் விசேட நிகழ்வு கல்குடா கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி தலைமையில் நடைபெற்றது. இதன்போது சீனக் குடியரசின் இலங்கைக்கான தூதுவராலயத்தின் பிரதி தூதுவர் கூவெய் (huwei) பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்த சோலார் சக்தி மின் இணைப்புகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திசாநாயக்க, ஆளுநரின் செயலாளர் என்.பி.மதநாயக்க உள்ளிட்ட பல பிரமுகர்களும் பிரசன்னமாக இருந்தனர்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஆலய பிரதி தூதுவர் இங்கு கருத்து வெளியிடுகையில், இலங்கைத் திருநாட்டுடன் நெருங்கிய நட்புறவை வளர்த்துக்கொள்வதற்கு சீன அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் இதனடிப்படையில் நாட்டில் நிலவும் மின்சார தடை மற்றும் பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு இந்த சோலார் சக்தி மின் இணைப்புகளை வழங்குவதற்கு சீன அரசாங்கம் முன் வந்திருப்பதாகவும் எதிர்காலத்தில் இலங்கைக்கு தேவையான பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு சீன அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

# அம்பாறை நகர சபையை மாநகர சபையாக தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி

அம்பாறை நகர சபையை மாநகர சபையாக தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் (12) அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி, மேலதிக நிதியைச் செலவிடாமல் ஒருசில மாவட்டங்களில் காணப்படும் நகர சபைகளை மாநகர சபைகளாக தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கடந்த ஒகஸ்ட் 8ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அங்கீகாரத்தை கருத்திற்கொண்டு அம்பாறை மற்றும் மன்னார் ஆகிய இரண்டு நகரங்களிலும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திப் பணிகளை இலகுபடுத்துவதற்காக அம்பாறை மற்றும் மன்னார் நகர சபைகள், மாநகர சபைகளாக தரமுயர்த்தப்படவுள்ளன.

இது தொடர்பில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் (12) அங்கீகாரம் வழங்கியுள்ளது.

eastthamilan@gmail.com

# கோணேஸ்வர ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தக் கோரிக்கை

## மூதூர் பிரதேச சபையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றம்

(எப்.முபாரக்)

திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தக் கோரியும், ஆலய வளாகத்தினுள் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றக் கோரியும் மூதூர் பிரதேச சபையில் பிரேரணை நேற்று (13) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மூதூர் பிரதேச சபையின் அமர்வு நேற்று (13) காலை இடம்பெற்றபோது உப தவிசாளர் சி.துரைநாயகத்தினால் தனிநபர் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், பல ஆயிரம் ஆண்டுகள் பழமையான வரலாற்றையும், இந்து சமயத்தின் அடையாளச் சின்னங்களையும் கொண்டுள்ள திருக்கோணேஸ்வர ஆலயமும், அதனைச் சூழவுள்ள இயற்கை வளங்களும் இலங்கையின் மிகப்பெரிய பொக்கிஷங்களாகும். இவற்றை அதன் பாரம்பரியத்தோடும், எழிலோடும் இயல்பாகவே பாதுகாக்கவேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் அளவீட்டுக்கமைய திருக்கோணேஸ்வர ஆலயத்தைச் சூழ 18 ஏக்கர் 1 ரூட் 29 பேச்சர்ஸ் காணியும், பாபநாச தீர்த்தக் கிணற்றைச் சூழ 3 ஏக்கர் 2 ரூட் 1 பேர்ச்சஸ் காணியும், கோட்டை வாசலின் முன்னால் உள்ள எல்லைப் பிள்ளையார் கோவிலைச் சூழ 26 பேர்ச்சஸ் காணியுமாக திருக்கோணேஸ்வர ஆலயத்திற்குரிய காணிகளாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், திருக்கோணேஸ்வர ஆலய வளாகம் இந்துக்களின் தொல்பொருட்கள் நிறைந்த இடமாக இருப்பதனால் தொல்லியல் திணைக்களத்தினால் தொல்லியலுக்குரிய இடமாக இவ்வாலய வளாகம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

எனினும், திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தினுள் சட்டத்துக்கு முரணாக அத்துமீறிய கடைகளும், கட்டுமானங்களும், மனித நடமாட்டங்களும் ஆலயத்தின் புனிதத்தைப் பாதிக்கும் விதமாகவும், ஆலய வளாகத்தைச் சூழவுள்ள இயற்கை வளங்களுக்கும், வன விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் இன்றுவரை இருந்து வருகின்றன. இதே நிலைமை தொடருமானால் ஆலயத்தின் புனிதத்தன்மை பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாது, திருக்கோணேஸ்வரத்திற்கு உரித்தான இயற்கை வளங்களையும், வனவிலங்குகளையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

திருகோணமலையின் இயற்கை வளமும், திருக்கோணேஸ்வரர் ஆலயமும் உலகத்திலுள்ள சுற்றுலாப் பயணிகளை கவருகின்றவையாக இருக்கின்றன. இவற்றினூடாகவும் பெருமளவான அந்நியச் செலாவணியை எமது நாடு ஈட்டி வருகின்றது. இதனால் இந்துசமய விழுமியங்களைப் பாதிக்காத வகையில் ஆலயத்தின்பால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விதமாகவும், பாரம்பரிய அம்சங்களை பாதுகாக்கும் விதமாகவும் ஆலயத்தில் புனரமைப்புப் பணிகளைச் செய்கின்ற ஆலய நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன், திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப் படுத்துவதோடு ஆலய வளாகத்தில் அத்துமீறி, சட்டத்துக்கு முரணான வகையில் அமைக்கப்பட்டுள்ள கடைகள், கட்டடங்கள் என்பவற்றை உடனடியாக அகற்றி ஆலயத்தின் எல்லைக்கப்பால் சட்ட ரீதியாகவும், நியாயமான முறையிலும் அவற்றுக்கான பதில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் இச்சபையின் ஊடாக தொல்லியல் திணைக்களம் உட்பட அதனுடன் தொடர்புடைய ஏனைய திணைக்களங்களையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# கடும் குளிரில் உறைந்த லண்டன்

## மஞ்சள் 'அலர்ட்'டால் மக்கள் அவதி

## 15 டிகிரி செல்சியஸுக்கு கீழ் செல்லும் வெப்பம்

## விமான - ரயில் சேவைகள் இரத்து

பிரித்தானியாவில் கடும் குளிருடனான வானிலை நிலவுவதுடன், அங்கு கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் விமான மற்றும் ரயில் போக்குவரத்து சேவைகள் இரத்துசெய்யப்பட்டுள்ளதுடன், மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

லண்டன் ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்தின் ஒற்றை ஓடுபாதை மூடப்பட்டதால், அங்கு அனைத்து விமான சேவைகளும் இரத்துசெய்யப்பட்டுள்ளன. விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் வானிலை ஆய்வு நிலையம் சார்பில் லண்டன் மற்றும் தென்கிழக்குப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மஞ்சள் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு வெப்பநிலை -15 டிகிரி செல்சியஸுக்கு கீழ் செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்போதும் பரபரப்புடன் காணப்படும் ஹீத்ரோ விமான நிலையத்தில், கடும் பனி மூட்டத்தால் விமானங்கள் புறப்படுவதிலும், தரையிறங்குவதிலும் சிக்கல் ஏற்பட்டு, 50 விமானங்களின் சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது.

பனிப்பொழிவால் முக்கிய நெடுஞ்சாலைகளில் ஏராளமான விபத்துகள் நேர்ந்துள்ளன.

பேர்மிங்ஹாம் நகரம் அருகே, உறைந்துபோன ஏரியில் விளையாடியபோது, ஐஸ் உடைந்து தண்ணீருக்குள் வீழ்ந்த 4 குழந்தைகளுக்கு மாரடைப்பு ஏற்பட்டதால் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடும் குளிருடனான வானிலை நிலவி வருகிறது. நடப்பாண்டின் முதல் பனிப்பொழிவு பதிவாகியுள்ளதாக தகவல்.

வீதிகள் தொடங்கி பெரும்பாலான திறந்தவெளி பகுதிகளில் எங்கு பார்த்தாலும் இந்த பனிப்பொழிவு காரணமாக வெண்ணிற போர்வை போர்த்தியுள்ளதை போன்றுள்ளது. இதன் காரணமக பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் ஓவல் கிரிக்கெட் மைதானம் முழுவதும் பனிப்பொழிவு காரணமாக வெண்ணிறத்தில் போர்வை போர்த்திக் கொண்டிருப்பதைபோல் காட்சியளிப்பது, சமூக வலைத்தளங்களில் கவனம் ஈரத்துள்ளது. அந்தப் படத்தை பார்த்த நெட்டிசன்கள் பலரும் பிரமிப்பில் உறைந்து போயுள்ளனர்.

வழக்கமாக ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் 'ரன்' மழையை பார்த்துவந்த பார்வையாளர்களுக்கு இந்தப் பனிமழை கண்களுக்கு விருந்து படைக்கும் வகையிலுள்ளது.

# ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற துணைத் தலைவர் எவா காயிலி நீக்கம்



கட்டாரில் கையூட்டு பெற்றுக்கொண்டு, மனித உரிமைகள் விவகாரத்தில் அந்த நாட்டுக்கு ஆதரவான கருத்தை பரப்பியதாக ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற துணைத் தலைவர் பொறுப்பிலிருந்து கிரீஸ் நாட்டைச் சேர்ந்த எவா காயிலி தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளாார்.

இது தொடர்பாக எவா உள்ளிட்ட 4 பேரை பெல்ஜியம் பொலிஸார் கைது செய்து, அவர்கள் மீது சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கு பதிவு செய்துள்ளது. மேலும், 16 இடங்களில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் சுமார் 6 இலட்சம் யூரோ பறிமுதல் செய்துள்ளனர்.

கட்டாரில் இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. எனினும், இந்த விவகாரத்தில் தங்களுக்கு ஆதரவான அரசியல் முடிவுகளை ஐரோப்பிய ஒன்றியம் எடுப்பதற்கு தனது பணபலத்தை கட்டார் பயன்படுத்தி வருவதாக நீண்டகாலமாகவே கூறப்பட்டு வந்தது.

# "மோடியை கொல்ல வேண்டும்"

## சர்ச்சை பேச்சால் கைதான காங்கிரஸ் மூத்த தலைவர்



"அரசியலமைப்பை பாதுகாக்க பிரதமர் மோடியை கொல்ல வேண்டும்" என பேசிய மத்தியபிரதேச காங். மூத்த தலைவர் ராஜா படேரியாவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மத்தியபிரதேச முன்னாள் அமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ராஜா படேரியா, நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

"மக்களை மதம், ஜாதி, மொழி அடிப்படையில் பிரதமர் மோடி பிரிக்கிறார். தலித், பழங்குடியினர், சிறுபான்மையினரின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டுமெனில், மோடியை கொல்ல வேண்டும்; இதற்கு நீங்கள் தயாரா?. இவ்வாறு அவர் பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், படேரியாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். அவர் மீது வழக்குப் பதிவு செய்யும்படி பொலிஸாருக்கு மாநில அரசு உத்தரவிட்டது.

இந்நிலையில், தாமோ மாவட்டம் ஹடா நகரிலுள்ள அவரது வீட்டில் வைத்து படேரியாவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## 25 நாட்கள் விண்வெளி பயணத்துக்குப் பின்...

# பூமிக்குத் திரும்பிய ஓரியன் விண்கலம்

நாசாஅனுப்பிய ஆளில்லா ஓரியன் விண்கலம், 25 நாட்கள் விண்வெளி பயணத்தை நிறைவு செய்துவிட்டு நேற்றுமுன்தினம் பூமிக்குத் திரும்பியது.

50 ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப திட்டமிட்டுள்ள நாசா, சோதனையோட்டமாக விண்வெளி வீரர்கள் போன்ற 3 பொம்மைகளுடன் ஆர்ட்டெமிஸ் ஒன் திட்டத்தின் கீழ் ஓரியன் விண்கலத்தை நிலவுக்கு அனுப்பியது.




பூமியிலிருந்து 4 இலட்சத்து 34 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் சென்ற அந்த விண்கலம், நிலவுக்கு மேல் 127 கிலோமீற்றர் உயரத்தில் பறந்துவிட்டு பூமிக்குத் திரும்பியது.

மணிக்கு 39 ஆயிரத்து 400 கிலோமீற்றர் வேகத்தில் பூமியை நோக்கி விரைந்த விண்கலம், வளிமண்டல உராய்வால் மணிக்கு 525 கிலோமீற்றர் வேகமாக குறைந்து, பரசூட்கள் மூலம் மணிக்கு 32 கிலோமீற்றர் வேகத்தில் பசுபிக் பெருங்கடலில் தரையிறக்கப்பட்டது.

## சமுர்த்தி பயனாளர்கள் உள்ளிட்ட அரச உதவிகளைப் பெறுவோர் தொடர்பில் ஆய்வு

(கல்லடி நிருபர்)

சமுர்த்தி பயனாளர்கள் உள்ளிட்ட அரச உதவிகளைப் பெறுவோர் தொடர்பில் ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், சமூக நலன்புரி சபை ஆகியவற்றுடன் இணைந்து இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது.


உதவிகள் கிடைக்கவேண்டிய குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டும், தகுதியற்றவர்களுக்கு அரச உதவிகள் கிடைப்பதாகவும் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கமைய, பயனாளர்களின் பட்டியலை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செம்மைப்படுத்தப்பட்ட புதிய ஆவணத்திற்கமைய 35 இலட்சம் குடும்பங்கள் அரச உதவி பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சட்டவிரோதமாக இறைச்சி விற்பனை செய்வோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

### கல்முனை மாநகர முதல்வர் றகீப் எச்சரிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)



கல்முனை மாநகர சபை எல்லையினுள் ஒரு வார காலத்திற்கு இறைச்சிக்காக ஆடு, மாடு அறுப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை மீறும் வகையில் யாராவது செயற்பட்டால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஜனாதிபதி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரது அறிவுறுத்தல்களுக்கமைவாக கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்குகின்ற விலங்கறுமனைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் அனைத்தும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை மூடப்பட வேண்டும் என்பதுடன், இறைச்சி விற்பனையும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

அதிகுளிர் காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக பெருந்தொகையான கால்நடைகள் உயிரிழந்து வருவதுடன், நோயுற்றுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. இவ்வாறான கால்நடைகள் அறுக்கப்பட்டு சட்டவிரோதமாக இறைச்சிக்கடைகளில் விற்பனை செய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே மாவட்டங்களுக்கிடையே மற்றும் மாகாணங்களுக்கிடையே இறைச்சி கொண்டு செல்லப்படுவது ஜனாதிபதியால் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொதுமக்களின் சுகாதாரத்தையும் நலன்களையும் கவனத்திற்கொண்டே 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை எமது கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்குகின்ற விலங்கறுமனைகளையும் இறைச்சிக் கடைகளையும் மூடி, இறைச்சி விற்பனையை முற்றாக தடை செய்யத் தீர்மானித்தோம்.

இதனை மீறுவோர் கைதுசெய்யப்பட்டு, அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கபட்டுள்ளதுடன், இவ்விடயம் தொடர்பில் கல்முனை மாநகர எல்லையினுள் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகையினால், சட்டவிரோத இறைச்சி வியாபாரம் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருப்பதுடன், அவ்வாறு இடம்பெறும் சந்தர்ப்பங்களில் பொலிஸாருக்குத் தகவல்களை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்று கல்முனை முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அநீதியான அரசாங்கத்தின் வரிவிதிப்பு கொள்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்!






(கல்லடி நிருபர்)

"அநீதியான அரசாங்கத்தின் அசாதாரண வரி விதிப்புக் கொள்கை மற்றும் மக்களை அழுத்தத்துக்கு உள்ளாக்கும் வரவு-செலவுத் திட்டம்" எனும் தொனிப்பொருளில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தினால் அமைதியான முறையிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (13) கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முன்னால் நடைபெற்றது.

அரசாங்க உத்தியோத்தர்களின் சம்பளத்தில் அறவிடப்படவுள்ள குறிப்பிட்ட வரி முறைமையிலுள்ள குறைபாடுகளை பல வழிமுறைகளில் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியும் இன்னமும் அவை கருத்திற் கொள்ளப்படாமல் இருப்பதனால் இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாகவும் நேற்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் முன்னெடுத்திருந்தது.

இவ்வெதிர்ப்பு நடவடிக்கையில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் சக ஊழியர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



**திருகோணமலை மாவட்ட மக்களே எனக்கு ஆணை தந்துள்ளனர். என்னை பதவியில் இருந்து விலகச் சொல்ல தமிழரசு மத்திய குழுவுக்கு எந்த உரிமையும் இல்லையென சம்பந்தர், மாவை சேனாதியை திட்டியதாக ஒரு செய்தியைப் பார்த்தன்!**

**அந்த மனிசன் 90 நெருங்ககுலயும் பதவு ஆச போகல்ல. எம்.பி. பதவியோட உள்ள இலங்கை சரித்திர நாயகன் சம்பந்தரு மட்டும்தான். தன்னை கொழும்புலதான் இருக்கும்படி திருகோணமல மக்கள்தான் சொன்னாங்க எண்டும் மறுகா சொன்னாலும் ஆச்சரிமில்ல. வாக்களித்த திருகோணமல மக்களுக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்!**

## பெண்கள், சிறுவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான வேலைத்திட்டம்




(மட்டக்களப்பு நிருபர்)



பெண்கள், சிறுவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான விழிப்புணர்வு முன்னாயத்த வேலைத்திட்டம் மட்டக்களப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.



இச்செயல்திட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (12) மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், மகளிர் சிறுவர் பிரிவு அலுவலர்கள், பொலிஸ் பாதுகாப்புப் படை அதிகாரிகள், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக இழைக்கப்படும் வன்முறைகள், இம்சைகள் வெறுப்புணர்வூட்டக்கூடிய சம்பவங்கள் இடம்பெறும்போது அதுபற்றி பொதுமக்கள் உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தும் இலகு வழிமுறையில் அமைந்த அவசர தொலைபேசி இலக்கங்கள்கொண்ட சுவரொட்டிகள் மக்கள் கூடும் பொது இடங்களிலும் பொதுப் போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து பஸ்களிலும் ஒட்டப்பட்டன.

மேலும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரதான தபால் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களிலும் இந்த அவசர தொலைபேசி இலக்கங்களைக்கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

## கின்னஸ் சாதனை புரிந்த பரதநாட்டிய கலைஞர்கள் மட்டக்களப்பில் கௌரவிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

பரதநாட்டியத்தில் கின்னஸ் சாதனை படைத்த மட்டக்களப்பைச் சேர்ந்த பரதநாட்டிய கலைஞர்களுக்கு விழித்தெழு பெண்ணே அமைப்பினால் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

விழித்தெழு பெண்ணே அமைப்பின் பணிப்பாளர் சசிகலா நரேந்திரன் தலைமையில் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்ற நிகழ்வுக்கு கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி புளோரன்சா பாரதி கென்னடி பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளார்.

உலக நாடுகளில் சிதறிக்கிடக்கும் பரதநாட்டியம் பயிலும் மாணவிகளுக்கிடையிலான ஆற்றல் மற்றும் திறமையை வெளிக்கொணரும் விதமாக 'தமிழ் அன்னை வர்ணம்' எனும் தொனிப்பொருளில் சர்வதேச மட்டத்தில் நிகழ்நிலையூடாக நடனம் அரங்கேற்றம் நடத்தப்பட்டதுடன், இந்நிகழ்வில் மட்டக்களப்பிலிருந்து பங்குபற்றி சாதனை படைத்த 40 நடனக்கலைஞர்கள் கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

கலைமாமணி மதுரை ஆர்.முரளிதரனின் நெறியாக்கத்தில் 850 நடனக் கலைஞர்கள் நிகழ்நிலையூடாக பங்கேற்றியிருந்த இந்நிகழ்வில் 40 நடுவர்கள் நடுவனம் புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் அன்னையைப் போற்றிய பாடலுக்கு பரதநாட்டிய நடனக் கலைஞர்கள் நடன அரங்கேற்றத்தை நிகழ்த்தி தமிழ் மொழிக்கு மரியாதை செலுத்தி சர்வதேச மட்டத்தில் தமது திறமையை வெளிக்காட்டி மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் எமது நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

குறித்த கௌரவிப்பு நிகழ்வின்போது நிருத்திய கலாலய ஆசிரியர் திருமதி வசந்தி நேரு, பாரத கலாலயா ஆசிரியர் திருமதி சுபித்ரா கிருபாகரன், அக்ஷயஷேத்ரா ஆசிரியர் திருமதி நித்யா விக்னேஸ்வரன், கலாசாதனாலயா அமைப்பின் ஆசிரியர் திருமதி வாசுகி பார்த்தீபன் உள்ளிட்ட இவர்களது மாணவிகள் 40 பேரும் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது விழித்தெழு பெண்ணே அமைப்பின் பணிப்பாளர் சசிகலா நரேந்திரனின் சிறந்த சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், வர்ணம் (உலக சாதனை) நடனம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நடன ஆசிரியர்கள், நடன கலைஞர்கள் மற்றும் பெற்றோர்களென பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## அட்டாளைச்சேனையில் காணி அளிப்புப்பத்திரம் வழங்கும் நிகழ்வு

(திராய்க்கேணி நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காணி அளிப்புப்பத்திரம் மற்றும் காணி உத்தரவுப்பத்திரம் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அகமட் ஷாபிர் தலைமையில் இன்று புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.எம்.ஏ.டக்லஸ், கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான வீ.ஜெகதீசன், எச்.எஸ்.என்.டீ சொயிஷா ஸ்ரீவர்தன, மாகாண காணி ஆணையாளர் பி.எம்.ஆர்.சி.தசநாயக்க, அம்பாறை மாவட்ட காணி ஆணையாளர் ஏ.எல்.இப்திகார் பானு, உதவிப் பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஸாபிர், உதவி காணி ஆணையாளர் ஜி.ரவிராஜன் மற்றும் மாவட்ட தலைமைக் காணி உத்தியோகத்தர், கே.எல்.எம்.முஸம்மில் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கல்முனை பஸ் நிலையத்தில் ஏற்பட்ட சர்ச்சைக்கு மாநகர முதல்வரின் தலையீட்டினால் தீர்வு





(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை பிரதான பஸ் நிலையத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களையும் தனியார் பஸ்களையும் தரிக்கச் செய்வதில் இரு தரப்பினரிடையே நிலவிவந்த சர்ச்சை மாநகர முதல்வரின் தலையீட்டினால் சுமூகமாக தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

குறித்த சர்ச்சை தொடர்பாக ஆராய்வதற்காக பஸ் நிலையத்திற்கு நேரடியாக கள விஜயம் மேற்கொண்ட மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், இரு தரப்பினரதும் கோரிக்கைகளை உள்வாங்கி, எவருக்கும் பாதகமில்லாத வகையில் இட ஒதுக்கீடுகளை மேற்கொண்டதன் மூலம் இப்பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாக முதல்வர் செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் இரு பிரிவு பஸ்களையும் நிறுத்துவதற்கான இடங்கள் முதல்வரின் நேரடிக் கண்காணிப்பில் வெள்ளைக்கோட்டினால் அடையாளப்படுத்தப்பட்டு, இட ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது பாதசாரிகள் மற்றும் பயணிகளுக்கும் மாநகர சபை மற்றும் பொது நூலகத்திற்கும் வாகனப் போக்குவரத்துகளுக்கும் இடையூறு ஏற்படும் வகையில் பொலிஸ் வீதியில் பஸ்களை நிறுத்தும் செயற்பாட்டை தடை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை, இதன்போது முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கமைவாக அவற்றுக்கும் பஸ் நிலையத்தின் ஒரு பகுதியில் மாநகர முதல்வரினால் இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதல்வர் செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இக்களப்பணியில் முதல்வருடன் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அமீர், மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், வருமானப் பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் உள்ளிட்ட ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

## குச்சவெளி பிரதேச சபையின் நிலாவெளி உப அலுவலக பொறுப்பதிகாரி நியமிப்பு

(கந்தளாய் நிருபர்)



குச்சவெளி பிரதேச சபையின் நிலாவெளி உப அலுவலக புதிய பொறுப்பதிகாரியாக முஹமட் அஷாட் நேற்று முன்தினம் (12) பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் வைத்து செயலாளரின் கையொப்பமிட்ட கடிதத்தை குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் வழங்கினார்.

இதன்போது சபையின் இறக்ககண்டி வட்டார உறுப்பினர் எம்.ஐ.எம்.சலீம் மற்றும் சபையின் நிர்வாகப் பிரிவு உத்தியோகத்தர் திருமதி ல.சிவதர்சினி ஆகியோரும் உடனிருந்தார்கள்.

# வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றாலும் தொடர்ந்து இந்திய கிரிக்கெட்டில்தான் கடைசிவரை இருப்பேன் – சஞ்சு பதில்



இந்திய அணியின் இளம் அதிரடித் துடுப்பாட்ட வீரரான சஞ்சு சாம்சனை அயர்லாந்து கிரிக்கெட் அணி தங்கள் நாட்டுக்காக ஆட வருமாறு அழைப்பு விடுத்த நிலையில், அதற்கு அவர் பதில் அளித்துள்ளார்.

சஞ்சு சாம்சன் 'அண்டர்-19' கிரிக்கெட் காலத்தில் இருந்து ரசிகர்களிடையே பெயர் பெற்றவர். ஐ.பி.எல். போட்டிகளில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் கேப்டனாக இருக்கும் அவர், கடந்த ஐ.பி.எல். போட்டியில் அந்த அணியை இறுதிப்போட்டிவரை கொண்டுவந்தார். இந்திய அணிக்காக 2015ஆம் ஆண்டிலேயே அறிமுகமான சஞ்சு சாம்சன், கடந்த 7 ஆண்டுகளில் வெறும் 16 ரி20 போட்டி மற்றும் 11 ஒருநாள் போட்டிகளில்தான் இந்திய அணிக்காக விளையாடியிருக்கிறார். ஒரு தொடரில் வாய்ப்பு வழங்கியும், மற்றொரு தொடரில் அவருக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டும் வருகிறது. தனக்கு வழங்கப்படும் வாய்ப்பில் தனது திறமையை வெளிப்படுத்தியும், அவருக்கான இடம் மறுக்கப்படுகிறது. பி.சி.சி.ஐ. அவரை அணியில் ஓரிடத்தில் விளையாடும் திறமையான வீரராக கருதவில்லை என்பதை இது காட்டுகிறது. சஞ்சு சாம்சனுக்கு வாய்ப்பு கிடைக்காததால், அவரை இந்திய கிரிக்கெட்டிலிருந்து விலகுமாறு அண்மையில் ரசிகர்களே கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில், அயர்லாந்து கிரிக்கெட் சபை சஞ்சு சாம்சனை தங்கள் நாட்டிற்காக விளையாட அவரிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அயர்லாந்துக் நாட்டு குடியுரிமை, கார் மற்றும் வீட்டு வசதி, இந்திய கிரிக்கெட்டிற்கு நிகராக வழங்கப்படும் சம்பளம் என அனைத்தையும் வழங்குகிறோம். எங்கள் நாட்டிற்கு வந்து அயர்லாந்து அணிக்காக விளையாடுங்கள் என அயர்லாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அயர்லாந்து அணிக்காக விளையாட வேண்டும் என்றால், முதலில் இந்திய கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற வேண்டும். ஆனால், சஞ்சு சாம்சன் தனது நாட்டின் மீது உள்ள பற்றால், இந்த வாய்ப்பு வேண்டாம் என்று நிராகரித்துள்ளார். வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும், தொடர்ந்து இந்திய கிரிக்கெட்டில்தான் கடைசிவரை இருப்பேன். பி.சி.சி.ஐ. அனுமதி அளித்தால் வெளிநாட்டு ரி20 லீக் போட்டிகளில் விளையாடுவேன் என்று பதில் அளித்துள்ளார். சஞ்சு சாம்சனின் இந்த முடிவு ரசிகர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

# நவம்பர் மாத சிறந்த வீரரான பட்லர்




ஐ.சி.சியின் நவம்பர் மாதத்துக்கான (ஆடவர் பிரிவு) சிறந்த வீரர் விருதை உலகக்கிண்ணத்தை வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜொஸ் பட்லர் வென்றுள்ளார்.

ஐ.சி.சியின் நவம்பர் மாதத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கு இங்கிலாந்தின் ஜொஸ் பட்லர் மற்றும் ஆதில் ரஷிட், பாகிஸ்தானின் ஷஹீன் ஷா அஃப்ரிடி ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்நிலையில், இருபதுக்கு 20 உலகக்கிண்ணம் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜொஸ் பட்லர், நவம்பர் மாதத்துக்கான சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் நியூசிலாந்துக்கு எதிராக 47 பந்துகளில் 73 ஓட்டங்களும் அரையிறுதியில் இந்தியாவுக்கு எதிராக 49 பந்துகளில் 80 ஓட்டங்களும் பெற்று இங்கிலாந்து அணி உலகக்கிண்ணம் வெல்ல பட்லர் முக்கிய காரணமாக அமைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# அகில இலங்கை சுகாதார சாரதிகள் சங்க கிரிக்கெட் சுற்றுத்தொடர்:
# கிழக்கு மாகாண அணிக்கு இரண்டாமிடம்





(கல்லடி நிருபர்)

அகில இலங்கை சுகாதார சாரதிகள் சங்கத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கிழக்கு மாகாண சுகாதார சாரதிகள் சங்கம் இரண்டாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. இச்சுற்றுப் போட்டிகள் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் கண்டி ரணவிம ரோயல் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. இதில் 9 மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 9 அணிகள் போட்டியிட்டன. கிழக்கு மாகாண கிரிக்கெட் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பிராந்திய சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கத்தினர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பீபா உலகக்கிண்ணத்தில் பிரான்ஸ் சம்பியனாகும் என்கிறார் பிரேசில் ஜாம்பவான்



பிரேசில் அணியின் முன்னாள் உதைபந்து ஜாம்பவான் ரொனால்டோ, இம்முறை பீபா உலகக்கிண்ணத்தை பிரான்ஸ் அணி வெல்லும் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், உலகக்கிண்ண உதைபந்துப் போட்டியின் இறுதியாட்டத்தில் பிரேசில் - பிரான்ஸ் அணிகள் மோதும் என்பதே எனது கணிப்பாக இருந்தது. இப்போது பிரேசில் வெளியேறி விட்டது. இனி பிரான்ஸ் அணி கிண்ணத்தை வெல்வதற்கே மிக அதிக வாய்ப்புள்ளது. தடுப்பாட்டம், தாக்குதல், நடுகளம் என்று எல்லா வகையிலும் நிலையான ஓர் அணியாக இருக்கிறது. கிலியன் எம்பாப்பே, இந்த உலகக்கிண்ணத் தொடரில் அபாரமாக விளையாடி வருகிறார். உடல் மற்றும் தொழில்நுட்ப அளவில் அவரது தரம் நம்ப முடியாத அளவுக்கு உள்ளது. உலகக்கிண்ணப் போட்டிகளின் மிகச்சிறந்த வீரராக அவர் உருவெடுக்கலாம் என்றார். லயோனல் மெஸ்சி உலகக்கிண்ணத்தை வென்றால் [illegible] முறையில் மகிழ்ச்சி அடைவேன். ஆனால், ஒரு பிரேசில் வீரராக அல்ல என்றும் குறிப்பிட்டார்.

## இன்றைய போட்டிகள்

MAZAPLAY LPL T20
LANKA PREMIER LEAGUE 2022

ஜப்னா கிங்ஸ் VS கண்டி பல்கொன்ஸ்
மாலை 3.00 மணி

கொழும்பு ஸ்டார்ஸ் VS தம்புள்ள அவுறா
இரவு 7.30 மணி

## இன்றைய அரையிறுதி ஆட்டம்

பிரான்ஸ் VS மொராக்கோ
நள்ளிரவு 12.30 மணி
அல்-பைத் ஸ்டேடியம்

FIFA WORLD CUP Qatar 2022



பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் களஸ் நைற் நிகழ்வும், கழகத்துக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வும் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ.சாபிர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

(படம் - பாலமுனை நிருபர்)

# நிப்போன் கேடய றகர் சுற்றுப் போட்டியில் நடப்பு சம்பியன் கண்டி விளையாட்டுக்கழகம் வெற்றி

(கண்டி நிருபர்)

நிப்போன் கேடயத்திற்கான முதற்தர கழகங்களுக்கிடையிலான றகர் சுற்றுப் போட்டியில் நடப்பு சம்பியனான கண்டி விளையாட்டுக்கழகம், ஸ்ரீலங்கா இராணுவ விளையாட்டுக்கழக அணியை 48-08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவாக வெற்றி கொண்டது.

கண்டி, நித்தவல றகர் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் கண்டி அணி மொத்தம் 8 ட்ரைகளை வைத்து மேற்படி புள்ளிகளைப் பெற்றது. இதில் லவங்க பெரேரா 2 ட்ரைகளையும் கவிந்து பெரேரா, சனுஷ்க அபேவிக்ரம, டினால் ஏக்கநாயக்க, மிலிந்த விஜேசுந்தர, லக்சித்த ரணவீர மற்றும் சத்துர்யா சொய்சா ஆகியோர் தலா ஒரு ட்ரை வீதம் வைத்தனர்.

இராணுவ விளையாட்டுக் கழகம் சார்பாக சுதரக்க திக்கும்புர ஒரு ட்ரையைப் பெற்றார். டில்சான் பெரேரா ஒரு பெனால்டியைப் பெற்றுக்கொடுத்தார். 3 கோல்கள் மற்றும் 5 ட்ரைகள் மூலம் கண்டி அணி 46 புள்ளிகளைப் பெற்றது. கண்டி அணி வீரர் தரிந்து ரத்வத்தை 3 ட்ரைகளுக்கான மேலதிகப் புள்ளிளைப் பெற்றுக்கொடுத்தார். இராணுவ விளையாட்டுக்கழகம் ஒரு ட்ரை மற்றும் ஒரு பெனால்டி மூலம் 8 புள்ளிகளைப் பெற்றது.

இடைவேளையின் போது 31-08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கண்டி அணி முன்னிலை வகித்து. ரவின் அலெக்சாண்டர் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார். பிரபல றகர் வீரர் பாஸில் மரீஜா கண்டி அணியின் பயிற்சியாளராகச் செயற்பட்டார்.



# மெத்யூஸின் போராட்டம் வீணானது



நடப்பு எல்.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற 10ஆவது லீக் போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணி 6 ஓட்டங்களால் கொழும்பு ஸ்டார்ஸ் அணியுடன் த்ரில் வெற்றியைப் பதிவு செய்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அஞ்சலோ மெத்யூஸ் தலைமையிலான கொழும்பு ஸ்டார்ஸ் அணி முதலில் திஸர பெரேரா தலைமையிலான ஜப்னா கிங்ஸ் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அதன்படி திஸர பெரேரா, சொஹைப் மலிக் ஆகிய வீரர்களின் அதிரடியோடு 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களை ஜப்னா கிங்ஸ் அணி பெற்றது.

179 ஓட்டங்களை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி ஒரு கட்டத்தில் 67 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை பறிகொடுத்து மிகவும் மோசமான நிலைக்குச் சென்றது. ஆனால், இத்தருணத்தில் அதிரடியுடன் கூடிய பொறுப்புடன் ஆடிய அஞ்சலோ மெத்யூஸ் – பென்னி ஹொவேல் ஜோடி 8ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 90 ஓட்டங்களைப் பகிர்ந்தது. பென்னி ஹொவேல் 20 பந்துகளில் 43 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதி 5 பந்துகளுக்கும் 22 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், மெத்யூஸால் 15 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் போராடிய மெத்யூஸ் 38 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 8 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களை குவித்தார்.

இப்போட்டியின் வெற்றி மூலம் ஜப்னா கிங்ஸ் இந்த தொடரில் நான்காவது வெற்றியைப் பதிவு செய்ய, இது கொழும்பு ஸ்டார்ஸ் வீரர்களுக்கு தொடரில் நான்காவது தோல்வியாக காணப்பட்டது.

# பாடசாலை நீர் விளையாட்டு சம்பியன்ஷிப் – 2022 ஆடவர் பிரிவில் சென்.ஜோசப் கல்லூரியும் மகளிர் பிரிவில் விசாகா வித்தியாலயமும் சம்பியன்





நெஸ்லே மைலோவின் அனுசரணையில் இலங்கை பாடசாலைகள் நீர் விளையாட்டு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 47ஆவது வருடாந்த இலங்கை பாடசாலைகளின் நீர் விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டிகள் கடந்த புதன்கிழமை முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை கொழும்பு சுகததாச நீச்சல் தடாகத்தில் நடைபெற்றன.

ஒட்டுமொத்த போட்டிகளின் முடிவுகளுக்கு அமைய ஆடவர் பிரிவில் 613 புள்ளிகளை பெற்ற சென்.ஜோசப் கல்லூரி சம்பியன் பட்டத்தை வென்றது. 402 புள்ளிகளை பெற்ற சென்.பீட்டர்ஸ் கல்லூரி இரண்டாமிடத்தையும் ஆனந்த கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன. மகளிர் பிரிவில் 475 புள்ளிகளைப் பெற்ற விசாகா வித்தியாலம் சம்பியன் பட்டத்தை பட்டத்தை வென்றது. 301.5 புள்ளிகளைப் பெற்ற மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றன.

இதேவேளை ஆடவர் மற்றும் மகளிர் ஒருங்கிணைந்த சம்பியன்ஷிப்பில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலை 451.5 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது. குறித்த பாடசாலை நீர் விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் 200 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 5000 போட்டியாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7